REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஒக்டோபர் 19 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
92
ANNIVERSARY
தினகரன்
வரு. 92 இல. 250
Saturday 19, October, 2024
13 பக்கங்கள்
50/-

## வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

### சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்தல்



நாட்டில் ஏற்பட்ட வெள்ள நிலைமை சற்று தணிந்து வருவதை தொடர்ந்து எலிக் காய்ச்சல் பரவக்கூடும். இதனால் உடலில் காயங்கள்

06

## இலங்கையில் 60 மானிய திட்டங்களை நிறைவு செய்துள்ள இந்தியா



இலங்கையில் 60 மானிய திட்டங்களை இந்தியா நிறைவு செய்துள்ளதுடன், தற்போது மேலும் 16 திட்டங்களை முன்னெடுத்துள்ளது. மானியங்கள் மற்றும் கடன் பொறிமுறைகள் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளதாக, இந்திய செய்தி சேவையான பி.ரி.ஐ. ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை மீண்டும் உறுதி செய்வதாகவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் உடனடி சவால்களை சமாளிக்க இருதரப்பு நிதி உதவியை விரிவுபடுத்துதல்

06


## சரக்கு ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்து



மட்டக்களப்பு நோக்கிச் சென்ற எண்ணெய் தாங்கி ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்துக்குள்ளான சம்பவமானது மின்னேரியா மற்றும் ஹிங்குராக்கொட ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. இதில் இரண்டு யானைகள் உயிரிழந்ததுடன், ரயிலும் தடம்புரண்டது.

## உணவுப் பொருள் சிலவற்றின் இறக்குமதி வரி அதிகரிப்பு

### டிச. 31வரை அமுலில் இருக்கும்



இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் சிலவற்றின் வரி அதிகரிக்கப்படுமென்று அரசாங்கம் தெரிவித்தது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை அமுலில் இருக்கும் வகையில் இந்த அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் குறிப்பிட்டது.

இதற்கமைய ஒரு கிலோகிராம் மைசூர் பருப்பு, மஞ்சள் பருப்பு ஆகியவற்றுக்கு 25 ரூபா வரியும் ஒரு கிலோகிராம் மாசி கருவாடு மற்றும் அதற்குப் பதிலான பொருட்களுக்கு 302 ரூபா விசேட வர்த்தக பண்ட வரியும் விதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை எலும்பு நீக்கப்பட்ட மீன் மற்றும் ஏனைய மீன்களை தவிர புதிய அல்லது உறைந்த மீன் ஒரு கிலோகிராமுக்கு 10% அல்லது 400 ரூபா என்ற உச்சபட்ச வரிக்கு உட்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### எதிர்வரும் 3 தினங்களுக்கு

## பூநகரி, சங்குப்பிட்டி பாலத்தில் கனரக வாகனம் செல்ல தடை

### அவசர திருத்த வேலையென அறிவிப்பு

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாண நகரிலிருந்து பூநகரி செல்லும் சங்குப்பிட்டி பாலத்தின் அவசர திருத்தவேலை காரணமாக 3 நாட்களுக்கு கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக உடனடியாக அவசர

06

### நாட்டின் அரசாங்க வருமானம்

## 2024 முதல் 8 மாதங்களில் 40.5 வீதத்தால் அதிகரிப்பு




2024 முதல் 8 மாதங்களில் நாட்டின் அரசாங்க வருமானம் 40.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதை நாட்டின் பொருளாதாரம் சிறந்த திசையில் சுட்டிக்காட்டுவதாக, நிதி அமைச்சு தெரிவித்தது.

கடந்த 2023ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களுடன் ஒப்பிடும் போது இந்த வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான (PreElection Budgetary Position Report) தேர்தலுக்கு முன்னைய பட்ஜட் நிலை அறிக்கையை வெளியிடும் போது நிதி அமைச்சு இவ்வாறு தெரிவித்தது.

இதற்கமைய 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் உட்பட அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,557.79 பில்லியன் ரூபாவாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மொத்த வரி வருமானம் 2,348.53 பில்லியன் ரூபாவாக பதிவு

06

### வீழ்ச்சியுற்ற வர்த்தகங்களை வலுப்படுத்த

# அனைத்து வங்கிகளிலும் வர்த்தக மறுமலர்ச்சி பிரிவு

### அமைக்குமாறு மத்திய வங்கி அறிவுறுத்து




நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள வர்த்தகங்களை மீண்டும் வலுப்படுத்துவதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக அனைத்து வங்கிகளிலும் வர்த்தக மறுமலர்ச்சி பிரிவுகளை அமைக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

வர்த்தகங்களுக்கு புத்துயிர் அளிக்க நிதி வழங்குதல், கடனுக்கான வட்டியை குறைத்தல், கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்தல் போன்ற பல சேவைகள் இந்தப் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கி ஒவ்வொரு வங்கிக்கும் புதிய பிரிவுகளை அமைக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு முன்னரே சில வங்கிகளில் இப்பிரிவுகள் செயற்பாட்டில் இருந்தன.

முன்னர் நிறுவப்பட்ட இப்பிரிவுகளை மேம்படுத்துவதுடன், மிகவும் திறமையான மற்றும் மக்கள்நேய சேவையை வழங்குவதற்கு புதிய முறையின் கீழ் செய்யப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை வட்டி விகிதங்களை பல சந்தர்ப்பங்களில் குறைத்துள்ளது. இந்த வகையில் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீத குறைப்பின் பலனை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவது வங்கிகளின் பொறுப்பாகும். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க, பல சந்தர்ப்பங்களில் கொள்கை வட்டி வீத குறைப்பின் அனுகூலத்தை பயன்படுத்தி கடன் வட்டியை குறைக்க உதவுமாறு வங்கி முறைமையிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன்படி வங்கிகள் வர்த்தகத்துறையை எளிதாக்கும் வகையில் குறைந்த வட்டியில் கடன் வழங்கத் தொடங்கியுள்ளன. இது தொடர்பாக இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான ரசல் பொன்சேகாவிடம் கேட்ட போது, இலங்கை வங்கியின் மாகாண மட்டத்திலுள்ள கிளைகளில் ஏற்கெனவே இவ்வாறான 11 நிலையங்கள் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தலைமையகத்தில் இவ்வாறு ஒரு பிரிவு இயங்குகிறது. அதன் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வினைத்திறன் மிக்க நட்புறவான சேவை வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள் MP உதய கம்மன்பில ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் அரசியல் செய்யக்கூடாது

### அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் உதய கம்மன்பில அரசியல் செய்யக்கூடாதென்று கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக குழுக்களை அமைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தாம் கேட்டுக்கொள்ளவில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே உதய கம்மன்பில வேண்டுகோள் விடுத்துள்ள அறிக்கைகள் தொடர்பாக தாம் ஆர்வம் கொண்டிருக்கவில்லையெனத்

06

### முன்னாள் ஜனாதிபதிகள், எம்.பி.க்களின்

## சிறப்புரிமை, சலுகைகளை ஆராய ஜனாதிபதியினால் குழு நியமனம்

### எழுத்து மூலம் அறிக்கையும் கோரல்




முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழு, முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை மற்றும் அவர்களின் தேவை தொடர்பாக எழுத்து மூல அறிக்கை

06

## குறைந்த வருமானம் கொண்ட உறுப்பு நாடுகளுக்கு நிதி உதவி

### சர்வதேச நாணய நிதியம் அங்கீகாரம்



சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக்குழுவானது வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி நிதியம் (Poverty Reduction and Growth Trust) வசதிகள் மற்றும் நிதி உதவி பற்றிய மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது.

இந்த நடவடிக்கை குறைந்த வருமானம் கொண்ட உறுப்பு நாடுகளுக்கு சலுகை நிதி வழங்குவதற்கான நிதியத்தின் செயற்பாடாகவும் அமைந்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவிக்கையில், நிதியத்தின் உறுப்பினர்களென்ற வகையில் நிதியத்தின் விரிவான சீர்திருத்தத்தை மேற்கொண்ட நாடுகளுக்கு இதன் ஊடாக சர்வதேச நாணய நிதியத்தின் மூலமான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படுமென்றார்.

"இன்றைய எங்கள் உறுப்பினர்கள் வறுமை குறைப்புக்கான விரிவான சீர்திருத்தம் மற்றும் நிதிப் பொதியை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், இந்த வளர்ச்சி அறக்கட்டளை (PRGT) மூலம் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மேலும் வலுவடைகிறது" எனவும் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மேலும் தெரிவித்தார்.

நிதியத்தின் இந்தப் பொதியில் நாணய நிதியத்தின்

06

### 2024 இன் 9 மாதங்களில்

## டீசலை பயன்படுத்தி 1.1 வீத மின்சாரம் மாத்திரமே உற்பத்தி




2024 செப்டெம்பர் 30ஆம் திகதி வரை டீசலை பயன்படுத்தி 1.1 சதவீத மின்சாரம் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

மின்சாரத்தை உற்பத்தி செய்ய மூன்று வகையான பெற்றோலிய எரிபொருளை பயன்படுத்துவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

அத்தோடு கனரக மசகு (HFO) எரிபொருள் மூலம் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு 715.3 GWh (மொத்த மின் உற்பத்தியில் 5.8) மின்சாரமும், நெப்த்தா (Naphtha) மூலம் 2024ஆம் ஆண்டில் 235.5 GWh மின்சாரமும் ( மொத்த மின் உற்பத்தியில் 1.9 மின்சாரம்), டீசல் மூலம் 2024ஆம் ஆண்டில் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு 133.1 GWh (மொத்த மின் உற்பத்தியில் 1.1) மின்சாரமும் பெறப்பட்டுள்ளதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.

கனரக எண்ணெய் (HFO) மற்றும் (Naphtha) ஆகிய

06

## காசாவில் கொல்லப்பட்டவர் ஹமாஸ் தலைவர் சின்வார்

### இஸ்ரேலிய இராணுவம் உறுதி

காசாவில் இஸ்ரேலிய படைகளால் கொல்லப்பட்டவர் ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் என்பதை இஸ்ரேல் உறுதி செய்துள்ளது. சின்வாரின் பற்களை ஆய்வு செய்து இதனை கண்டுபிடித்ததாக தெரியவந்துள்ளது.

கொல்லப்பட்ட ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வாரின் உடலை அடையாளம் காண இஸ்ரேலுக்கு பல் மருத்துவ பதிவுகள் உதவியதாக தெரியவந்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். அதில் ஒருவர் ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவர் யாஹ்யா சின்வாரென்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. இஸ்ரேல் வெளியுறவு அமைச்சரும் இதனை உறுதி செய்துள்ளார்.

ஹமாஸ் தலைவரான யாஹ்யா சின்வார், கடந்த ஜூலை மாதம் ஈரானில் நடந்த தாக்குதலில் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட பின்னர் ஹமாஸின் தலைவரானார். சின்வார் 1962 இல் காசா நகரமான கான் யூனிஸிலுள்ள அகதிகள் முகாமில் பிறந்தவர். அவர் ஹமாஸின் ஆரம்பக்காலத்திலிருந்து உறுப்பினராக இருந்து வந்துள்ளார். அண்மைக்காலமாக ஹமாஸ் படைக்கு இவர் தலைமை தாங்கினார்.

1980 களின் பிற்பகுதியில் இஸ்ரேல் நாட்டில் சின்வார் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் 12 பாலஸ்தீனர்களை கொன்றதாக ஒப்புக்கொண்டார். அதன் காரணமாக சுமார் 22 ஆண்டுகாலம்

06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



# ஆசியா, பசிபிக் பொருளாதார மேம்பாட்டிற்கான போட்டிக் கொள்கை

ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிறுவனம் (ADBI) ஆகியவை இணைந்து ஆசியா மற்றும் பசிபிக் பொருளாதார மேம்பாட்டுக்கான போட்டிக் கொள்கையை வடிவமைத்தல் என்ற அற்புதமான கூட்டு ஆராய்ச்சி வெளியீட்டை வெளியிட்டன. இந்த புத்தகம் 18 அக்டோபர் 2024 அன்று ஜப்பானின் டோக்கியோவிலுள்ள ADBI இல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது, இதில் பிலிப்பைன்ஸின் தேசிய பொருளாதார மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் செயலாளரான அர்செனியோ பாலிசாக்கனின் முக்கிய உரை இடம்பெற்றுள்ளது. திறமையான போட்டிச் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மூலம் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆதார அடிப்படையிலான நுண்ணறிவு மற்றும் செயல்படக்கூடிய பரிந்துரைகளை வழங்கும் 13 அத்தியாயங்களை இந்த விரிவான வேலை கொண்டுள்ளது.

புத்தக வெளியீட்டின் போது ADBI டீன் டெட்சுஷி சோனோப் தனது தொடக்கக் கருத்துகளில் விளக்கியது போல், "பொருளாதார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தாத ஆனால் அதை மேம்படுத்தும் போட்டிக் கொள்கையை வடிவமைப்பதற்கு கணிசமான ஆராய்ச்சித் தொகுப்பு தேவைப்படுகிறது.

இந்த வெளியீடு ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் போட்டிக் கொள்கை குறித்த இலக்கியத்தில் இருக்கும் இடைவெளிகளை நிவர்த்தி செய்கிறது, இது கோட்பாட்டு கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைச் செயலாக்கங்கள் இரண்டின் விரிவான ஆய்வுகளை வழங்குகிறது. இது போட்டிக் கொள்கையின் முக்கிய தூண்கள், இந்தக் கொள்கைகளின் பரவல் மற்றும் தழுவல் மற்றும் வறுமை மற்றும் சமத்துவமின்மை மீதான அவற்றின் தாக்கங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இகாமர்ஸ், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகள் மற்றும் இயங்குதள அடிப்படையிலான தொழில்கள் தொடர்பான வளர்ந்து வரும் சிக்கல்களை விசாரிக்கும் போது போட்டி நிறுவனங்களின் கட்டமைப்பு, நடத்தை மற்றும் செயல்திறன் ஆகியவற்றை புத்தகம் ஆராய்கிறது.

பொருளாதார போட்டியை ஊக்குவிப்பது பிராந்தியத்தில் வளர்ந்து வரும் மற்றும் முதிர்ந்த சந்தைகளில் முன்னுரிமையாகும், ஏனெனில் அனைத்து பொருளாதாரங்களும் தொழில்நுட்பம், சந்தை இயக்கவியல், அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார நோக்கங்களில் ஏற்படும் மாற்றங்களால் தொடர்ச்சியான மாற்றங்களை எதிர்கொள்கின்றன" என்று ADB தலைமைப் பொருளாதார நிபுணர் ஆல்பர்ட் பார்க் குறிப்பிட்டார்.

## காட்டு யானை தாக்கி உயிரிழப்பு

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)



புத்தளம் புதிய எலுவாங்குளம் ஐலிய கிராமத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (17) அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முந்தல் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தோட்டமொன்றில் காவலாளியாக கடமைபுரிந்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிசாம் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வண்ணாத்திவில்லு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## புத்தளம் அல் முஹ்பாத் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டி





புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் காஸிம் வீதியில் அமைந்துள்ள அல் முஹ்பாத் முன்பள்ளியின் 30 ஆவது வருட நிறைவும், வருடாந்த விளையாட்டு போட்டிகளும் புத்தளம் நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

முன்பள்ளி பொறுப்பாசிரியை லரீபா சுஹைல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக புத்தளம் நகர சபையின் செயலாளர் கீதானி ப்ரீதிகா, புத்தளம் மாவட்ட சமூக அபிவிருத்தி அதிகாரி ரத்னாயக்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்கள் பல்வேறு விதமான போட்டி நிகழ்வுகளில் பங்கேற்றனர். சகல மாணவர்களுக்கும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு, பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உதவி ஆசிரியைகளான ஆர்.ஏ. ப்ராபாசினி இனோகா ரணசிங்க, பாத்திமா சாக்கியா, பாத்திமா நிஸ்ரின் ஆகியோர் மாணவர்களை நன்கு பயிற்றுவித்திருந்தனர்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் சனத்தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(திறப்பனை தினகரன் நிருபர்)





2024 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை மற்றும் குடிசன வீட்டு வசதி தொகை மதிப்பு கணக்கெடுப்பின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் அநுராதபுரம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விலாசூரிய தலைமையில் இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, மதவாச்சி மேற்கு 67 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வீடொன்றில் இக்கணக்கெடுப்பு பணி ஆரம்பமாகியது.

இலங்கையின் 15 ஆவது சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு இவ்வாண்டு நடத்தப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான பணிகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது. அந்த பணிக்காக அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும். கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கையில் மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் இவ்வாண்டு கணக்கெடுப்பு பணிகள் நடத்தப்படுகின்றது.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் சனத்தொகை கணக்கெடுப்பு துணை ஆணையர் ஜி.டி.கே.எஸ். பெரேரா,அநுராதபுரம் சிரேஷ்ட புள்ளியியல் நிபுணர் எஸ். தனபாலசிங்கம், மதவாச்சி பிரதேச செயலாளர் எம்.சி.மலவரஆராச்சி, உதவி பிரதேச செயலாளர், மதவாச்சி பிரதேச செயலக கணக்காளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், புள்ளிவிபர அதிகாரி மனுஜா ஹரன்காவ, கள கிராம அதிகாரி, மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான மேற்பார்வை அதிகாரிகள் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## சட்டவிரோதமாக டீசல் விற்பனை

### சந்தேகநபர் கைது!

கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி பணத்திற்காக சட்டவிரோதமான முறையில் டீசல் விற்பனை செய்த நபரை 1,225 லீற்றர் டீசலுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், விசேட அதிரடிப்படையின் தம்புள்ளை முகாமை சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று கலென்பிந்துனுவெவ, மொரகொட மீகஸ்வெவ, நாமல்புர பிரதேசத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளது.

அப்போது, பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 1,225 லீற்றர் டீசல் மற்றும் அது தொடர்பான உபகரணங்களுடன் அதே பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மொரகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முந்தல் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய பிரதேச இலக்கிய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடலாக்கம், சித்திரம் ஆகிய போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டனர்.

(படங்கள் உடப்பு குறூப் நிருபர்)

## மாதம்பிட்டிய கொலை; சந்தேகநபர்கள் இருவர் கைது!

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதம்பிட்டிய மயானத்திற்கு முன்பாகவுள்ள பகுதியில் கடந்த 16 ஆம் திகதி நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த நபர் ஒருவரை காரிலிருந்து வந்த இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கியால் சுட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 45 மற்றும் 50 வயதுடைய கொழும்பு 10 மற்றும் கொழும்பு 15 ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த நபரை வீட்டிலிருந்து துப்பாக்கிச்சூடு நடந்த இடத்திற்கு சந்தேகநபர்கள் இருவரும் முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கொலைக்கு உதவியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மிஷன் டி விஷன் வழங்கும் கலைப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று

மிஷன் டி விஷன் (M D V) இலங்கை புகைப்படக் கலைஞர் மற்றும் வீடியோ கிறப்பர் (மிஷன் டி விஷன் (M D V)) சமூக நல அறக்கட்டளையின் கலைக்கழகம் நடத்தும் கலைப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு இல. 271, வென் பத்தேகம விமலவன்ச மாவத்தை (டீன்ஸ் வீதி), மருதானை, கொழும்பு 10 இலுள்ள பற்றிமா தேவமாதா தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

மிஷன் டி விஷன் (M D V) அமைப்பின் உறுப்பினரும் புகைப்படக் கலைஞருமான ஸ்ரீதரின் புதல்வியான யதிசாவின் 4ஆவது ஆண்டு நினைவாக இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. புகைப்படக் கலைஞரான ஸ்ரீதர் கலைத்துறையில் காட்டிவரும் தீவிர ஆர்வத்தைப் போன்று அவரது புதல்வியான யதிசா சித்திரம் வரைவதில் பெரும் அக்கறை காட்டி வந்தார். இதனால் அவரது நினைவு தினத்தை அனுஷ்டிக்கின்ற இன்றைய நிகழ்வில், கலைத்துறையில் போட்டிகளை நடத்தி சித்திரம் வரைவதில் ஆர்வம் கொண்ட மழலைச் செல்வங்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அபேட்சகரான எம்.ஜே.எம் பைசல் மற்றும் மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் புத்தளம் மாவட்ட தலைவர் மௌலவி ஏ.எம்.தமீம் ரஹ்மானி செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகளுடனும் மாவட்ட உலமா சபையின் முன்னாள் தலைவர் மௌலவி அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிமுடனும் சந்தித்துக் கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா இன்று

பல்வேறு துறைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் இன்று 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக் கழக தொழில் நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல ஊடக ஆளுமைகள் மற்றும் பல பிரபலங்கள் கலந்து கொள்ளும் இவ்விருது விழாவுக்கு பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய ஆய்வுகள் மற்றும் அரபு பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் மற்றும் தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சங்குப்பிட்டி பாலத்துக்கருகில் விபத்து நபரொருவர் படுகாயம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்து நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.44 வயதான நபர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் வீழ்ந்தமையால் விபத்து சம்பவித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த நபரை அப்பகுதி மக்கள் மற்றும் பொலிஸார் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## லுணுகலை பாத்திமா சிஹானாவின் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று

லுணுகலை மண்ணின் முதல் இஸ்லாமியப் பெண் ஊடகவியலாளராகவும் மாணவியாகவும் ஆசிரியராகவும் எழுத்தாளனாகவும் ஊடகவியலாளனாகவும் திகழும் பாத்திமா சிஹானா கவிதை நூலொன்றை வெளியிடவுள்ளார். இவரது இலக்கிய பயணத்தில் சிறகின் மொழி என்னும் கவிதை தொகுப்பு நூலின் இரண்டாம் பதிப்பை இன்று 19ஆம் திகதி இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூடத்தில் ஸ்கை தமிழ் விருது விழாவில் ஒரு அங்கமாக வெளியிட்டு வைக்கவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு தனது முதலாவது கவிதை நூலை பேராதனை சர்வ கலாசாலை மண்டபத்தில் வெளியிட்டார்.அது மாத்திரம் இன்றி சாதாரண தர விஞ்ஞான பாடத்திற்கான கடந்த கால வினாக்களுக்கான விளக்க உரை, விஞ்ஞான புனை கதை நூல் ஆகியவற்றையும் எழுதியுள்ளார்.

அஹதியா பாடசாலை மாணவர்களுக்கான இடைநிலை சான்றிதழ் பரீட்சைக்கான பரீட்சை வழிகாட்டி நூல் ஒன்றையும் விரைவில் வெளியிட உள்ளார்.

## உலக கிண்ண கெரம் போட்டி;
## தேசிய அணிக்கு பிரதமர் வாழ்த்து



இம்முறை ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறும் கெரம் உலகக் கிண்ண தொடரில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகளை கொண்ட இலங்கை தேசிய கெரம் அணியினர் நேற்று (18) பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அணியினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட பிரதமர், வீர வீராங்கனைகளுக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார். 2024 நவம்பர் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் சென். பிரான்சிஸ்கோவில் இடம்பெறும் ஆறாவது கெரம் உலகக் கிண்ண தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் அணியில் முகாமையாளருடன் 8 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தால் இந்த சுற்றுப்பயணத்துக்கான அனுசரணையாக 5 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படுவதுடன், அதனை கையளிப்பதன் அடையாளமாக அதன் பொருளாளர் சுஜீவ கொடலியத்தவும் இந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்றார்.

அணி முகாமையாளராக ரணில் அபேசிங்க செயற்படவுள்ளார். மொஹம்மட் ஷஹீட், அனாஸ் அஹமட், கவீன் நிம்நெத் பீரிஸ், தினேஷ் நிஷாந்த பெர்னாண்டோ ஆகிய வீரர்களும் ஜோசப் ரோஷிதா வடுகே, ஹிருஷி மல்ஷானி பீரிஸ், தருஷி ஹிமஹன்சிகா வீரசேகர. தஸ்மிலா காவிந்தி ஆகிய வீராங்கனைகளும் தொடரில் பங்கேற்கவுள்ளனர்.

### ஜெனீவாவில் நடைபெற்ற 149ஆவது
# அனைத்து பாராளுமன்ற ஒன்றிய பேரவையில் இலங்கை
### பாராளுமன்ற செயலாளர் நாயகம்,பிரதி செயலாளர் நாயகம் பங்கேற்பு

ஜெனீவா நகரில் கடந்த 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடைபெற்ற 149ஆவது அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் (IPU) பேரவையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் பாராளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான உலகளாவிய அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டும் வகையில் 130 நாடுகளை சேர்ந்த 630 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் கலந்துகொண்ட இலங்கை பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோர் முக்கியமான கூட்டங்களிலும் சந்திப்புகளிலும் பங்குபற்றினர்.



இம்முறை பேரவையில் 54 பாராளுமன்ற சபாநாயகர்கள், 36 பிரதி சபாநாயகர்கள், 36% பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 45 வயதுக்கு குறைந்த 25% பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். பாராளுமன்ற வகிபங்கில் உள்ளடங்கிய தன்மை மற்றும் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு அர்ப்பணிப்பை பலதரப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பு கோடிட்டுக் காட்டுகின்றது.

பொது மாநாடு, பாராளுமன்ற செயலாளர் நாயகங்களின் சங்கத்தின் (ASGP) கூட்டம், ஆசியபசுபிக் குழுக் கூட்டம், நிலைபேறான அபிவிருத்தி பற்றிய நிலைக்குழுக் கூட்டம் மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் மன்றம் உள்ளிட்ட பிரதான கூட்டங்களில் இலங்கை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இலங்கை பிரதிநிதிகளின் பங்கேற்பு உலகளாவிய பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் பெறுமதியான பங்களிப்பை ஏற்படுத்தியது.

இதன்போது இலங்கை பிரதிநிதிகள் அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி டுலியா அக்சன் (Tulia Ackson), பாலின கூட்டு நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் பிரிகிட் பிலியோன் (Brigitte Filion), IPU வின் SDG நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இஸபெல் ஒபாடியாரு (Isabel Obadiaru) ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். அத்துடன் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அணுசக்தி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எலெனா பக்லொவாவை (Elena Buglova) சந்தித்ததுடன், பூட்டான் தேசிய பேரவையின் செயலாளர் நாயகம் டுபாவுடன் (Mr. Duba) இரு தரப்பு சந்திப்பிலும் இலங்கை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## யா/சண்டிலிப்பாய் இந்து கல்லூரியின்
## 'நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்'

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 'நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் 2024' இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அப்பாடசாலை பவள விழா மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு மேற்படி பாடசாலையின் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமை தாங்குவார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் ஜீவசுதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் உதவி கல்விப் பணிப்பாளர் சோமசுந்தரம் கலாவண்ணன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக பிரித்தானியா பழைய மாணவர் சங்கத் தலைவர் சாருலதா ஆனந்தராஜா, பழைய மாணவர் தர்மலிங்கம் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசியுரையை ஓய்வுநிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் நிகழ்த்துவார்.

நினைவுப் பேருரையை வலிகாமம் கல்வி வலயத்தின் ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளர் கலாநிதி சின்னையா குகநேசன் நிகழ்த்துவார்.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவின்
## புதிய தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன நியமனம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் புதிய தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்னவை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

இதற்கான நியமன கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவால் நேற்று (18) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. அத்துடன் ஆணைக்குழுவின் உப தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கே.எல். வசந்தகுமார நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஏனைய உறுப்பினர்களாக சிரேஷ்ட பேராசிரியர்களான ராஹுல அதலகே, ஓ.ஜீ.தயாரத்ன, சுப்பிரமணியம் ரவிராஜ், சட்டத்தரணி கே.சீ.டபிள்யூ.உனம்புவ உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவர் கடமை ஏற்பு




நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அசங்க அபேவர்தன தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிராமிய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் விஜித ஹேரத் தனது அமைச்சின் கீழுள்ள நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கே புதிய தலைவரை நியமித்துள்ளார். அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சந்தன பண்டாரவிடமிருந்து நியமன கடிதத்தை பெற்றுக்கொண்ட நிலையிலேயே அவர் தனது அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

06

# மட்டு. நகர் சென்ற எண்ணெய் தாங்கி சரக்கு ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்து
### 2 யானைகள் பலி; ரயிலும் தடம்புரள்வு





மட்டக்களப்பு நோக்கிச் சென்ற எண்ணெய் தாங்கி ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன், ரயிலும் தடம்புரண்டுள்ளது.

இதன் காரணமாக மட்டக்களப்பு கொழும்பு பிரதான ரயில் பாதையில் இயங்கும் ரயில் சேவைகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய முனையத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த எண்ணெய் தாங்கி ரயிலானது மின்னேரியா மற்றும் ஹிங்குராக்கொட ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று (18) அதிகாலை 3.30 மணியளவில் இந்த விபத்தை எதிர்நோக்கியது.

இதன்போது நான்கு எரிபொருள் தாங்கிகள் தடம்புரண்டுள்ளதுடன், அவற்றில் இரண்டு தாங்கிகள் கவிழ்ந்துள்ளன. இந்த விபத்து காரணமாக ரயில் பாதையும் கடுமையாக சேதமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தை தொடர்ந்து கொழும்பு, கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கவிருந்த இரண்டு ரயில்களும், மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, கோட்டைக்கு பயணிக்கவிருந்த ரயிலும் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டன.

அத்துடன் கல்ஓயாவிலிருந்து திருகோணமலைவரை இயக்கப்படவிருந்த இரண்டு ரயில்களும், மஹவவிலிருந்து மட்டக்களப்புவரை இயக்கப்படவிருந்த இரண்டு சரக்கு ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டதாகவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

## தினகரன் 92
THINAKARAN

### வருடங்களுக்கு முன் தினகரன்
### இன்று 19 ஒக்டோபர் 1932


ரெயில்வே நேர அட்டவணை
ஜெனரல் மானேஜருக்கு ஏராளமான கடிதங்கள்
புதிய மாற்றங்கள்

### ரெயில்வே நேர அட்டவணை
### ஜெனரல் மானேஜருக்கு ஏராளமான கடிதங்கள்
### புதிய மாற்றங்கள்
### கரையோர இருப்புப்பாதையில் சிற்சில சிறிய மாற்றங்கள் கையாடப்படும்

அக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் ரெயில்வே நேர அட்டவணை பெரிதும் கண்டிக்கப் பெற்றுவருகிறது. இவ்வட்டவணை ஆரம்பித்த காலந்துவக்கம் பலர் பலவிதமான கடிதங்களை ரெயில்வே ஜெனரல் மானேஜருக்கு அனுப்பியிருக்கின்றனர். சில கடிதங்கள் சிற்சில திருத்த ஆலோசனைகளைக் குறிப்பிட்டன.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## பல்கலை மாணவர் சங்கங்களுடன் பிரதமர் ஹரிணி கலந்துரையாடல்

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் மாணவர் சங்கங்களுக்கிடையில் நேற்று முன்தினம் (17) கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், மாணவ நலன்புரி விடயங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரையில் முகங்கொடுத்து தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் படையணி, மாணவர் உரிமைக்கான படையணி மற்றும் அதன் கீழுள்ள பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள், வைத்தியபீட மாணவர் செயற்பாட்டாளர் குழு மற்றும் அனைத்து மருத்துவபீட மாணவர் சங்கங்கள், அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் படையணி, அனைத்து உயர் தேசிய டிப்ளோமா மாணவர் படையணி, சமுத்திர பல்கலைக்கழக மாணவர் சங்கம், பொறியியல் தொழில்நுட்ப நிறுவன மாணவர் சங்கம், மொரட்டுவை பொறியியல்பீட மாணவர் சங்கம் உள்ளிட்ட பல மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### குருநாகல், வாரியபொல நீதிமன்றங்களில்
## வழக்கு பொருட்களை வைக்கும் அறையிலிருந்து பணம் திருட்டு

குருநாகல், வாரியபொல நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு பொருட்களை வைக்கும் அறையிலிருந்து 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக வாரியபொல பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (17) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாரியபொல நீதவான் நீதிமன்றத்தின் அதிகாரி ஒருவரே தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதிக்கும் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்றிருக்கலாமென்று அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாரியபொல பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

### முட்டை விலையை அதிகரித்து
## அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சிலர் முயற்சி

மீண்டும் முட்டை விலையை அதிகரித்து அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முயற்சி இடம்பெற்று வருவதாக, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்தார்.

இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டுமென வலியுறுத்திய அவர், நாட்டில் தற்போது முட்டை மாபியா செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த வாரம் முட்டையின் விலை குறைந்ததன் காரணமாக தாம் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களின் விலை குறைந்தது. இதனால் தற்போது கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

முட்டை மாபியாவினால் சந்தையில் முட்டையின் விலை 45 ரூபாவை எட்டியுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஐப்பசி மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 15

**குறள் தரும் சிந்தனை**

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை

நடந்த தவறு காரணமாகத் தமக்குள் வருந்துகிற நாணம் எனும் உணர்வு, பெரியவர்களுக்கு அணிகலன் ஆக விளங்கும். அந்த அணிகலன் இல்லாமல் என்னதான் பெருமிதமாக நடைபோட்டாலும், அந்த நடையை ஒரு நோய்க்கு ஒப்பானதாகவே கருத முடியும்.

# மத்திய கிழக்கில் கடமையாற்றும் இலங்கையருக்கு அறிவுறுத்தல்

மத்திய கிழக்கில் நாளுக்கு நாள் யுத்த பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்நிலைமை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அதேநேரம் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமைதி வழி முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இருந்த போதிலும் ஒரு வருடம் கடந்தும் கூட அமைதி நிலை ஏற்பட்டதாக இல்லை. மாறாக போர்பதற்றம் தான் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலாளர்களாகப் பணி புரியும் தங்கள் பிரஜைகளின் நலன்கள் மற்றும் பாதுகாப்பு குறித்து ஒவ்வொரு நாடும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. உலகின் பல நாடுகளையும் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் இப்பிராந்திய நாடுகளில் தொழிலாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் இலங்கையும் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் தம் குடிமக்களின் நலன்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தி வருகின்றது. இதன் நிமித்தம் அந்தந்த நாடுகளில் பணியாற்றும் இலங்கைக்கான தூதுவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களையும் வெளிவிவகார அமைச்சு வழங்கி இருக்கிறது.

அந்த அடிப்படையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், 'மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர் தாங்கள் பணி புரியும் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்படத் தவறலாகாது என்று குறிப்பிட்டுள்ளதோடு மத்திய கிழக்கில் பணிபுரியும் மற்றும் வசிக்கும் தமக்கு நெருக்கிய உறவினர்களுக்கு ஏதாவது அவசர நிலை ஏற்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்களுக்கு வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவித்துள்ளது. இதன் நிமித்தம் தொலைபேசி இலக்கங்களையும் வெளிவிவகார அமைச்சு வழங்கி இருக்கிறது.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

ஏனெனில் மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள நாடுகளில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர் தொழில் புரிகின்றனர். அவர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுபவர்களாக உள்ளனர். குறிப்பாக இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறும் முக்கிய மூலங்களில் ஒன்றாக வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோரும் விளங்குகின்றனர்.

அதன் காரணத்தினால் இலங்கை பிரஜைகள் என்ற வகையிலும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை நல்குபவர்கள் என்ற அடிப்படையிலும் மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையரின் நலன்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும்.

ஏனெனில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி பலஸ்தீன், காஸாவின் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலின் தெற்கு பகுதியில் தாக்குதல் நடாத்தியதோடு 200 க்கும் மேற்பட்டவர்களைப் பணயக் கைதிகளாகவும் பிடித்து சென்றனர்.

இத்தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்காகவும் பணயக் கைதிகளை மீட்டெடுப்பதற்காகவும் எனக்கூறி காஸா மீது போரை இஸ்ரேல் ஆரம்பித்தது. ஆனால் ஒரு வருடம் கடந்தும் கூட போர் முடிவுற்றதாக இல்லை. காஸா மீதான யுத்தம் காஸாவுக்கு வெளியே ஒரு புறம் லெபனானுக்கு வியாபித்துள்ளது. சிரியா, யெமன் மீதும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவை இவ்வாறிருக்க, ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் எந்த வேளையிலும் போர் உருவாகக்கூடிய பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் யஹ்யா சினவார் நேற்று முன்தினம் (17.10.2024) இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு நாளுக்கு நாள் போர்ப் பதற்றம் அதிகரித்துக் கொண்டிருக்கும் மத்திய கிழக்கில் பல நாடுகளின் பிரஜைகளைப் போன்று இலங்கையரும் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறனர். குறிப்பாக தற்போது யுத்தம் இடம்பெறும் இஸ்ரேலில் 12 ஆயிரம் பேரும், லெபனானில் 7 ஆயிரத்து 500 பேரும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. இவர்களில் சிலர் யுத்தம் இடம்பெறும் பிரதேசங்களில் பணியாற்றுவதாகவும் அவர்களது பாதுகாப்பு மற்றும் நலன்களுக்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்தந்த நாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் போர் இடம்பெறும் நாடுகளுக்கு அருகிலுள்ள ஜோர்தான் உள்ளிட்ட நாடுகளிலும் இலங்கையர் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருவதையும் மறந்து விடலாகாது.


அதன் காரணத்தினால் மத்திய கிழக்குப் பிராந்திய நாடுகளில் பணியாற்றும் இலங்கையரின் நலன்கள் குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்டியது தவிர்க்க முடியாத காரியமாக உள்ளது. அந்த வகையில் இது தொடர்பில் இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் வரவேற்று பாராட்டுகின்றனர்.

ஆனாலும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர் வெளிவிவகார அமைச்சு வழங்கும் அறிவுரை, ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். இவ்விடயத்தில் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளலாகாது.

editor.tkn@lakehouse.lk

# பாளி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து

## இந்தியப் பிரதமர் மோடி பெருமிதம்



பாளி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ளது. புத்தரின் மகத்தான பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துரைக்க உதவும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புத்தரின் போதனைகளை போற்றும் சர்வதேச அபிதம்மம் திவஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் இதுகுறித்து கூறியுள்ளார். தொன்மையான பாளி மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை இந்திய மத்திய அரசு வழங்கியுள்ளது. இது, புத்தரின் மகத்தான பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துக்காட்ட உதவும். அதேநேரம், சுதந்திரத்துக்குப் பிறகு ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை போற்றாமல் புறக்கணிப்பு செய்ததை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய புவிசார் அரசியல் சூழ்நிலையில் புத்தரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. அதன்படி போரை விலக்கி வைத்து அமைதிக்கான பாதையை உருவாக்குவதில் அனைத்து நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாடும் அதன் பாரம்பரியத்தை அதன் அடையாளத்துடன் தொடர்புபடுத்தி பெருமை கொள்ளும் போது, இந்தியா அதில் மிகவும் பின்தங்கியது. இதற்கு, சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவுக்கு படையெடுத்து வந்தவர்கள் நமது அடையாளத்தை அழிக்க முயன்றதே காரணம். அதன்பின்னர் இருந்த ஆட்சியாளர்கள் (காங்கிரஸ்) அடிமை மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்ததால் அதை வழிமுறையை கடைபிடித்து வந்தனர். தற்போது அந்த நிலை மாற்றப்பட்டுள்ளது.

நாடு இப்போது தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபட்டு சுயமரியாதை, தன்னம்பிக்கையுடன் முன்னேறி வருகிறது. இந்த மாற்றத்தால்தான் துணிச்சலான முடிவுகளை அரசு எடுக்கிறது. அதன் ஒரு பகுதிதான் பாளிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது. எனது அரசின் கொள்கைகள், திட்டங்கள் புத்தபெருமானின் போதனைகளால் வழிநடத்தப்படுகின்றது.

அதேபோன்று, உறுதியற்ற மற்றும் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ள உலகம் அதன் பிரச்சினைகளுக்கு புத்தரின் போதனைகளில் இருந்து தீர்வுகளைப் பெற முடியும்.

புத்தரின் கூற்றுப்படி சண்டை மற்றும் கருத்து வேறுபாடுகள் அமைதிக்கு வழி வகுக்காது. அமைதியை விட பெரிய மகிழ்ச்சி எதுவும் இல்லை என்பதை இந்தஉலகம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு இந்தியப் பிரதமர் மோடி கூறினார்.

"பாளி மொழி" யின் சரியான தோற்றம் அறிஞர்களிடையே விவாதத்திற்குரிய விஷயமாக உள்ளது. 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டு வரை, பாளி என்று அழைக்கப்படும் குறிப்பிட்ட மொழி எதுவும் இல்லை. பாளி மொழி பற்றிய மிகத் தொன்மையான குறிப்புகள் புத்தகோசர் என்ற பௌத்த அறிஞரின் விளக்கவுரைகளில் காணப்படுகின்றன. பாளியின் தோற்றம் குறித்து பல கோட்பாடுகள் வெளிவந்துள்ளன.

பண்டைய இந்தியாவின் வரலாற்றை புனரமைக்க பாளி பற்றிய ஆய்வு முக்கியமானது. ஏனெனில் அதன் இலக்கியங்கள் கடந்த காலத்தைப் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கும் பொருட்களில் நிறைந்துள்ளன. இருப்பினும், பல பாலி நூல்கள் எளிதில் அணுக முடியாத கையெழுத்துப் பிரதிகளில் மறைக்கப்பட்டுள்ளன. இலங்கை உட்பட மியன்மார், தாய்லாந்து போன்ற பௌத்த நாடுகளிலும், பௌத்தர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் சிட்டகாங், ஜப்பான், கொரியா, திபெத், சீனா, மங்கோலியா போன்ற பகுதிகளிலும் பாளி மொழி தொடர்ந்து படிக்கப்படுகிறது.

பாளி என்பது பல்வேறு பேச்சுவழக்குகளிலிருந்து நெய்யப்பட்ட ஓர் அழகிய திரைச்சீலையாகும். இது பண்டைய இந்தியாவில் பௌத்த மற்றும் சமண பிரிவுகளால் தங்கள் புனித மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.மு. 500 இல் வாழ்ந்த புத்தர் தனது போதனைகளை வழங்க பாளி மொழியைப் பயன்படுத்தினார்.

இது அவரது போதனைகளைப் பரப்புவதற்கான அடிப்படை ஊடகமாக மாறியது. பௌத்த இலக்கியத்தின் முழு தொகுப்பும் குறிப்பாக திரிபிடகம், பாளி மொழியில் இயற்றப்பட்டுள்ளது.

முதலாவது வினய பிடகம். இது பௌத்த துறவிகளுக்கான துறவற விதிகளை கோடிட்டுக் காட்டுகிறது, நெறிமுறை, நடத்தை மற்றும் சமூக வாழ்க்கைக்கான கட்டமைப்பை வழங்குகிறது.

இரண்டாவது சுத்த பிடகம். புத்தரின் ஞானம் மற்றும் தத்துவ நெறிகளை உள்ளடக்கிய உரைகள் மற்றும் உரையாடல்களின் களஞ்சியமாகும்.

மூன்றாவதாக அபிதம்ம பிடகம். இது நெறிமுறைகள், உளவியல் மற்றும் அறிவுக் கோட்பாடு தொடர்பான பல்வேறு தலைப்புகளை ஆராய்ந்து, மனம் மற்றும் யதார்த்தத்தின் ஆழமான பகுப்பாய்வை வழங்குகிறது.

பாளி இலக்கியத்தில் ஜாதக கதைகள் உண்டு. அவை புத்தரின் முந்தைய வாழ்க்கையில் போதிசத்வர் அல்லது எதிர்கால புத்தர் கதைகளை விவரிக்கும். இந்த விவரிப்புகள் இந்திய மக்களின் பொதுவான பாரம்பரியத்தை எதிரொலிக்கின்றன. பகிரப்பட்ட தார்மீக மதிப்புகள் மற்றும் கலாசார மரபுகளைப் பிரதிபலிக்கின்றன. இந்த இலக்கிய பங்களிப்புகள் பண்டைய இந்திய சிந்தனை மற்றும் ஆன்மீகத்தைப் பாதுகாப்பதிலும் கடத்துவதிலும் பாளி ஒரு முக்கிய மொழியாக இருப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

**அபி...**



# அனைத்து இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுமுள்ள வறுமையை ஒழித்தல்

## நேற்றுமுன்தினம் சர்வதேச வறுமை ஒழிப்பு தினமாகும்

வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் ஒழிப்பது மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகும். 1990 மற்றும் 2015 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கடுமையான வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ள போதிலும், மிக அதிகமான மனித தேவைகளுக்காக இன்னும் பலர் போராடுகிறார்கள்.

2015 ஆம் ஆண்டு நிலவரப்படி, சுமார் 736 மில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு 1.90 அமெரிக்க டொலருக்கும் குறைவான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்; பலருக்கு உணவு, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதி இல்லை. சீனா, இந்தியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து உயர்த்தியுள்ளது, ஆனால் இம்முன்னேற்றம் சீரற்றதாக உள்ளது. ஆண்களை விட பெண்கள் ஏழைகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம், ஏனெனில் அவர்களுக்கு குறைந்தளவிலான ஊதியம், கல்வி, மற்றும் குறைவான சொத்து உரிமை உள்ளது.

தெற்காசியா மற்றும் சகாராகீழமை ஆபிரிக்கா போன்ற பிற பகுதிகளில் தீவிர வறுமையில் வாழும் 80 சதவீதத்தினரைக் கொண்டுள்ளமையால் முன்னேற்றம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் புதிய அச்சுறுத்தல்களாக, சண்டைகள் மற்றும் உணவு பாதுகாப்பின்மை, மக்களை வறுமையிலிருந்து வெளியேற்றுவதற்கு இன்னும் கூடுதலான செயற்பாடுகள் தேவை.

2030க்குள் அனைத்து வடிவங்களிலும் அனைத்து பரிமாணங்களிலும் உள்ள வறுமையை, நாங்கள் தொடங்கியதை முடிக்க தைரியமான அர்ப்பணிப்புடன் முடிவுக்குக் கொண்டுவர உதவும். இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய, அதிகரிக்கும் அடிப்படை வளங்களையும் சேவைகளையும் குறி வைப்பதை உள்ளடக்குகிறது, மேலும் சண்டைகள் மற்றும் காலநிலை தொடர்பான பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களையும் ஆதரிக்கின்றது.2030 ஆம் ஆண்டளவில் எல்லா இடங்களிலுமுள்ள மக்களின் தீவிர வறுமையை ஒழிக்க வேண்டும். தற்போது நாளொன்றுக்கு 1.25 அமெரிக்க டொலர்களிலும் குறைந்த வருமானம் பெறும் மக்களே தீவிர வறுமையிலுள்ளவர்களாக கணிக்கப்படுகிறார்கள். 2030களில், தேசிய வரைவிலக்கணங்களின் படி வறுமையினதும், அதன் சகல பரிமாணங்களின் கீழும் வாழும் எல்லா வயதுமட்டங்களிலும் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் விகிதாசாரத்தினை குறைந்தது அரைவாசியாக குறைக்க வேண்டும்.

தேசிய ரீதியில் பொருத்தமானதும், ஆகக்குறைந்த வருமானமீட்டும் பிரிவினர் உள்ளடங்கலாக அனைவருக்குமானதுமான சமூக பாதுகாப்பு அமைப்புக்கள்

மற்றும் நடவடிக்கைகளை அமுல்படுத்தல் அத்துடன் 2030 களில் நலிவடைந்தோர் மற்றும் வறியவர்களுக்கு போதியளவில் பாதுகாப்பை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் .

2030 களில், எல்லா ஆண்கள் மற்றும் பெண்களுக்கு, குறிப்பாக ஏழைகள் மற்றும் நலிவடைந்தோருக்கு பொருளாதார வளங்கள், அடிப்படை சேவைகளை பெற்றுக்கொள்ளுதல், காணி மற்றும் ஏனைய சொத்துக்கள் மீதான உரிமை மற்றும் அதிகாரம், பரம்பரைச் சொத்துக்கள், இயற்கை வளங்கள், பொருத்தமான புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறுநிதி அடங்கலான நிதிச்சேவைகள் ஆகியவற்றில் சமமான உரிமை இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

2030களில், ஏழைகள் மற்றும் நலிவடைந்தோரின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை கட்டியெழுப்புதல் மற்றும் காலநிலை சம்பந்தமான தீவிர நிகழ்வுகளின் போது அவர்களின் பாதிக்கப்படும் தகவினையும், ஏனைய பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றாடல் தொடர்பான அதிர்ச்சிகள், அழிவுகளையும் குறைத்தல் மிகவும் முக்கியமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் போதுமானதும், எதிர்வு கூறத்தக்கதுமான வருமானத்தை வழங்குவதற்காக, குறிப்பாக ஆகக் குறைந்தளவு அபிவிருத்தியடைந்த நாடுகளில் வறுமையை அதன் சகல பரிமாணங்களிலும் ஒழிப்பதற்கான செயற்திட்டங்களையும், கொள்கைகளையும் அமுல்படுத்துவதற்காக, அதிகரிக்கப்பட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பின் மூலம் பல்வேறுபட்ட மூலதன ஆதாரங்களிலிருந்து குறிப்பிடத்தக்களவு வளங்கள் ஒன்றுதிரட்டப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளின் மீதான அதிகரிக்கப்பட்ட முதலீட்டுக்கு உதவியாக, வறியோர் சார்பான மற்றும் பாலினம் சார்பான அபிவிருத்தி திட்டங்களை அடிப்படையாக கொண்டு, உறுதியான கொள்கை கட்டமைப்புக்களை தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் உருவாக்க வேண்டும்.

**அ.கனகசூரியர்...**



# இஸ்ரேல் மீது அதிகரிக்கும் உலக எதிர்ப்பு!

கடந்த ஓராண்டாக காஸா போரை எதிர்த்து, அரபுலகம் ஆர்ப்பரித்து எழுந்து நிற்பது ஒருபுறமிருக்க, ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் பிற மேற்குலக நாடுகளிலும் போர்நிறுத்தம் கோரி பலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள் அந்தந்த நாடுகளின் தலைநகரில் நடைபெற்றுள்ளன.

அதேவேளை தங்கள் பெயரால் இந்தக் கொடூர யுத்தம் வேண்டாம் என புலம்பெயர்ந்து வாழும் யூதர்களில் ஜனநாயக உணர்வு கொண்டோர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பாவில் பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மைக்ரன், பயங்கரவாத எதிர்ப்புப் போர் என முதலில் இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாடு எடுத்திருந்த போதும், பின்னர் உள்நாட்டுப் போராட்டங்களின் அழுத்தம் காரணமாக போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

லண்டனில் நடந்த பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்திற்கு எதிராகப் பேசிய இங்கிலாந்தின் முன்னாள் உள்துறை செயலர் சுவல்லா பிரேவர் மேன் பதவியில் இருந்து நீக்கப்படும் நிலையும் ஏற்பட்டது.

அமெரிக்காவிலும் போர்நிறுத்தம் கோரி தலைநகரங்களில் போராட்டங்கள் பல நடந்தன. இளந்தலைமுறையினர் போராட்டங்களுக்கு வந்தமை ஒரு புதிய காட்சி என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கா இஸ்ரேலுக்கு படை உதவி செய்யக்கூடாதென்று அவர்கள் குரல் எழுப்பினர்.

அமெரிக்க அதிபர் பைடன் உள்ளிட்ட அமெரிக்க அரசத் தலைவர்கள் இஸ்ரேல் நடத்திவரும் இன வழிப்புக்கு துணைபோகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இஸ்ரேலுக்கு பண உதவி, ஆயுத உதவி போன்ற உதவிகள் செய்யக்கூடாதென கலிஃபோர்னியா நீதிமன்றத்தில் அரசமைப்புச் சட்ட உரிமைகளுக்கான மையம் (Centre for Constitutional Rights) என்ற மனிதவுரிமை அமைப்பு வழக்கு தொடுத்தும் இருந்தது.

தென்னாபிரிக்கா இஸ்ரேலுடனான தனது தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டது. லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பொலிவியா, கொலம்பியா, சிலி, ஹொண்டுராஷ் ஆகிய இடதுசாரிக் கட்சிகள் ஆளும் நாடுகள் இஸ்ரேலுடனான அரசியல் உறவை முழுமையாக துண்டித்துக் கொண்டன. கடந்த வருட 2023 நவம்பரில் சவுதியில் அரபுக் கழக 22 அரபு நாடுகளும், இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பின் OIC – 57 இஸ்லாமியர் பெரும்பான்மை கொண்ட நாடுகளும் கூடி போர்நிறுத்தத்தை வலியுறுத்தியும் இஸ்ரேல் நடத்திவரும் படுகொலைகளைக் கண்டித்தும் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் போர்க்குற்றங்களைக் கண்டித்தும் கட்டாயப்படுத்தும் தீர்மானம் கொண்டுவர ஐநா. பாதுகாப்பு சபையை வலியுறுத்தின.

பிரிக்ஸ் BRICS கூட்டமைப்பின் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா நாடுகளின் தலைவர்கள் சந்தித்து காசாவில் நடந்து வரும் போர்க்குற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், போர் நிறுத்தம் வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

மேற்படி நாடுகள் மட்டுமன்றி எகிப்து, எத்தியோப்பியா, ஆர்ஜென்டினா, சவுதி, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் ஆகிய நாடுகளின் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். ஐ.நா செயலர் அண்டோனிய குட்டரசும் இதில் கலந்து கொண்டார்.

கடந்த வருடம் நவம்பர் 15இல் ஐ.நா பாதுகாப்பு அவையில், உடனடி மற்றும் நீடித்த மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்புச் சபையில் குறைந்தது 9 நாடுகள் வாக்களித்தால்தான் ஒரு தீர்மானம் நிறைவேறும். மோல்டா என்ற நாடுதான் இத்தீர்மானத்தை முன்மொழிந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆகிய நாடுகள் இத்தீர்மானத்தில் வாக்களிக்காமல் விலகிக் கொண்டன.

ஏனைய 12 நாடுகளின் ஆதரவுடன் இத்தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானத்தில் ஹமாஸ் நடத்திய ஒக்டோபர் 7 தாக்குதல் பற்றியும், இஸ்ரேல் நடத்தும் வான்வழிக் குண்டு வீச்சுகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.




ஹமாஸ் தாக்குதல் பற்றிய கண்டனக் குறிப்பு இல்லை என்பதற்காக அமெரிக்கா உறுப்பு நாடுகளைக் கடிந்து கொண்டது.

போர் தொடங்கியதில் இருந்து நான்கு தீர்மானங்கள் பாதுகாப்பு அவையில் முன்மொழியப்பட்டு அவை தோற்கடிக்கப்பட்டன.

## சர்வதேச கண்டனங்களை மீறி தொடரும் யுத்தம்; இரு துருவங்களாக பிரிவடையும் உலகநாடுகள்!






பிரேசில் கொண்டு வந்த தீர்மான முன்மொழிவில், இஸ்ரேலுக்கு இருக்கும் தற்பாதுகாப்புக்கான உரிமை பற்றிய குறிப்பு இல்லை என்ற காரணத்தின் பெயரால் அமெரிக்கா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தோற்கடித்தது. போர்நிறுத்தம் கோராத அமெரிக்காவின் தீர்மான முன்மொழிவு ரஷ்யாவாலும் சீனாவாலும் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை ரஷ்யாவின் இரு தீர்மான முன்மொழிவுகள் போதிய ஆதரவில்லாததால் தோற்றுப் போயின.

ஐ.நா. பாதுகாப்பு அவையில் தீர்மானம் நிறைவேற்ற முடியாத நிலையில், 2023 ஒக்டோபர் 23இல் ஐ.நா. பொதுப்பேரவையின் அவசரக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு போர்நிறுத்தம் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது கட்டாயப்படுத்தும் தீர்மானம் அல்ல. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு நீண்ட காலமாக ஆதரவு தெரிவித்து வந்த இந்திய அரசோ அத்தீர்மானத்தில் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்றது.

**இஸ்ரேல் பாதுகாப்பு தீர்மானங்களை ஒருபோதுமே மதித்ததில்லை:**

2023 ஒக்டோபர் 23 இல் ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் அதன் உறுப்பினர்களின் வெளியுறவு அமைச்சர்கள் பங்குபெற்றிருந்த போது, ஐ.நா. செயலர் அண்டோனியா குட்டர்சு, ஹமாசின் தாக்குதலைக் கண்டித்த அதேநேரத்தில், பலஸ்தீனர்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவிக்கும் மூச்சுத்திணறும் ஆக்கிரமிப்பையும் கண்டித்தார்.

ஆனால், பலஸ்தீன மக்களின் துயரங்களின் பெயரால் ஹமாஸ் நடத்திய தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. ஹமாஸ் நடத்திய தாக்குதலின் பெயரால் பலஸ்தீன மக்களுக்கு கூட்டுத் தண்டனை வழங்குவதையும் ஏற்க முடியாது என்றும் பேசினார்.

இஸ்ரேல் ஒருபோதும் ஐநா. பாதுகாப்பு அவைத் தீர்மானத்தைப் பொருட்படுத்தியதில்லை அமெரிக்கா தன்னைப் பார்த்துக் கொள்ளும் என்ற துணிச்சல்தான் இதற்கு காரணம் ஆகும்.காஸாவில் எந்த நேரத்திலும் தொற்றுநோய் பரவும் அபாயம் இருக்கிறது என்று ஐ.நா எச்சரித்திருந்த நிலையில் கட்டாரின் பேச்சுவார்த்தை முயற்சியில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு நான்கு நாட்கள் போர் நிறுத்தத்திற்கான உடன்பாட்டை இஸ்ரேலும் ஹமாஸும் எட்டின. குழந்தைகள், பெண்கள் அடங்கிய பணயக் கைதிகள் 50 பேரை விடுவிப்பதாக ஹமாஸும், 150 பேரை விடுவிப்பதாக இஸ்ரேலும் உடன்பாடு கண்டன.

ஒக்டோபர் 7 ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பின்பு பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு பெருகியுள்ளது என்பது உண்மையே. தற்போது இஸ்ரேலின் பயங்கர முகம் உலகுக்கு தெரியவந்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான முகாம் – சீனா தலைமையிலான முகாம் என கொஞ்சம் கொஞ்சமாக உலகம் இரு முனையாகப் பிரிந்து காட்சியளிக்கத் தொடங்கியுள்ளது என்பதுதான் இங்கு ஆபத்தான விடயம்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# சிறார்கள் மத்தியில் ஒவ்வாமை ஏற்படுத்தும் துரித உணவுகள்!

இலங்கை உட்பட ஆசிய மக்களில் பலர் தங்களது உணவுகளை வீடுகளில் சமைப்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் மேற்கத்தேய கலாசார தாக்கமும், அதன் நுகர்வின் மீதான ஆர்வமும் இன்று ஆசிய மக்களிடையே தங்களது உணவுப் பாரம்பரியத்தை மங்கலடையச் செய்துள்ளது.

மேற்கத்தேய உணவுப் பழக்கவழக்கங்கள், உடை மற்றும் பண்பாட்டு அம்சங்களை எமது நாடும் ஏற்கத் தொடங்கியுள்ளமை ஆழமான உண்மையாகும். உணவு என்பது உயிர் வாழ்வதற்கு அவசியமானது என்பதையும் தாண்டி உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதில் பிரதான இடத்தைப் பெறுகின்றது.

அண்மைக் காலமாக துரித உணவு வகைகள் பற்றிய விழிப்புணர்வுகள் அதிகரித்துள்ளன. துரித உணவு என்பது இலகுவாக தயாரித்து உண்ணக்கூடிய உடன் உணவாகும். துரித உணவு என்பது குறைவான நேரத்தில் அவசரமாக தயாரிக்கக் கூடியதும், இலகுவான முறையில் எடுத்துச் செல்லக் கூடியதுமாகும்.

துரித உணவுகள் ஆங்கிலத்தில் junk food, Fast food என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. அதிகளவு உப்பு, சீனி, கொழுப்பு கொண்ட உணவு வகைகளான இவற்றில் புரதம், விட்டமின், மற்றும் இரும்புச்சத்து என்பன மிகக் குறைந்த அளவில் உள்ளன. அல்லது அச்சத்துக்கள் எதுவும் இல்லாமலும் இருக்கலாம்.

பாஸ்ட்பூட் என்பது உடனடியாக குறுகிய நேரத்தில் தயாரிக்கப்பட்டு உணவகங்களில் விற்பனைக்கு உள்ள உணவு வகைகள் ஆகும். இதிலும் புரதம், விட்டமின், கனிப்பொருட்கள் மிகவும் குறைந்த அளவிலோ அல்லது அறவே இல்லாமலும் இருக்கலாம். மிகுந்த உப்பு, கொழுப்பு கொண்ட உணவுகள் துரித உணவுகள் என்று தேசிய சத்துணவுக் கழகம் வரையறுத்துள்ளது.

எந்தவொரு ஊட்டச்சத்தும் இல்லாத இந்தத் துரித உணவுகளில் கலோரிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறான உணவுகளை இளம் வயதினரான பாடசாலை மாணவர்கள் உட்கொள்வதனால் சிறுவயதிலேயே ஆரோக்கியம் சார் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்கின்றது. சிறுவயதில் துரித உணவுப் பழக்கவழக்கமானது சிறார்களிடத்தில் உயர் இரத்த அழுத்தம், சோர்வு, மனவெழுச்சிசார் பிரச்சினைகள், சிறுநீரக நோய்கள், நீரழிவு, உடற்பருமன், சமிபாட்டுக் கோளாறு, குறைவளர்ச்சி, இதய நோய்கள் மற்றும் மூளையின் தொழிற்பாட்டு வேகம் குறைதல் போன்ற பாதகமான விளைவுகளை வளரும் காலத்தில் ஏற்படுத்தும்.

உலக நாடுகளில் 6–7 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 27 வீதமானவர்களுக்கும், 13–14 வயதுக்கு இடைப்பட்ட 39 வீதமானவர்களுக்கும் அதிகரித்த துரித உணவு பழக்கத்தினால் ஆஸ்துமா நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது சிறுவர்களின் கற்கும் திறனையும் வெகுவாகவே பாதிக்கும் ஒன்றாகவும் அறியப்படுகின்றது.

பெற்றோர்களின் வெளிநாட்டு வாழ்க்கை, தாய்மார்களின் தொழிலின் தன்மை, ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்கள், பெற்றோர்களின்வாழ்க்கைமுறை,நண்பர் குழுவின் செல்வாக்கு, உணவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சுவையூட்டிகள், உணவகங்களின் பிரபல்யம், இலகுவான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் போன்ற பல்வேறு காரணங்களினால் துரித உணவுகளில் அதிக நாட்டம் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

கடந்த காலங்களில் இலங்கையில் விவாதிக்கப்பட்ட இரண்டு நிறமிகளின் சர்வதேச நிலையை ஆராயும் போது Sunset yellowE110 என்ற நிறமி ஐஸ்கிரீம், ஜெலி, குளிர்பானம் மற்றும் வேகவைத்த பொருட்களில் காணப்படும் மஞ்சள் நிற நிறமியாகும். இந்த இரசாயன பொருட்களைக் கொண்ட தயாரிப்புகளை உண்பது இளம்பிள்ளைகளின் திறன் விருத்தி மற்றும் அவர்களின் வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கும். அத்துடன் வயிற்று வலி, தோல் அழற்சி மற்றும் பெரியவர்களுக்கு பரவும் பாலியல் நோய் தொற்றுக்கள் என்பவற்றுக்கு காரணமாக அமையும்.

CarmoisineE112 என்ற நிறமி உணவின் சுவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. உணவுக்குப் பிந்திய நொதித்தலுக்கு பயன்படுத்தப்படும் இது தயிர், கெட்டியான சூப்கள், லொலிபொப், ஐஸ்கிரீம், சீஸ் மற்றும் கேக் கலவையிலும் காணப்படுகின்றது. இந்த இரசாயனப் பொருட்கள் அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளதுடன், ஐரோப்பிய உணவு தர நிர்ணய நிறுவனம் E102, E104, E110, E112, E124, E129 போன்ற ஆறு செயற்கை நிறமிகளை அகற்றுமாறு உற்பத்தியாளர்களைக் கேட்டுள்ளது.



## அலட்சியப்படுத்துவது ஆரோக்கியமானதல்ல!

இன்று நாட்டின் அநேகமான பகுதிகளில் சிறுவர்களுக்கு ஒவ்வாமை ரீதியான நோய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையானது கடந்த பத்து ஆண்டுகளை விட அதிகரித்துள்ளதாக சுகாதார அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக துரித உணவு வகைகளை உண்பதால் சிறுவர்களுக்கு அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒருவித ஒவ்வாமை நோய் ஏற்படுவதாக கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனை தோல்நோய் மருத்துவர் சிறீயானி சமரவீர தெரிவித்தார். நாட்டில் சுமார் 30 வீத சிறுவர்கள் அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நோயானது மரபணு ரீதியாக பரவக் கூடியது என்பதுடன் ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவை இந்த நோயின் அறிகுறிகளாக உள்ளதாக அடையாளம் காட்டிய அவர், இந்த நோய் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதிகமாக காணப்படுவதுடன் இளம்பெண்கள் மத்தியிலும் இந்த நோய் அபாயம் அதிகம் உள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

தெற்காசியாவில் இலங்கை குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட ஒரு மூன்றாம் உலக நாடாக காணப்படுகின்றது. இலங்கையில் வயது வந்தோரிடையே அதிக எடை மற்றும் உடல் பருமன் பாதிப்பு முறையே 25 வீதம் மற்றும் 9.2 வீதம் என உள்நாட்டு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 18–40 சதவீதமானவர்களின் இறப்புக்கு துரித உணவு போன்ற தவறான உணவு பழக்கமே காரணமாக இருக்கும் என்றும் ஆய்வாளர்களினால் கணிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் ஒவ்வாமை நிலைமைக்கான காரணங்களில் துரித உணவு நுகர்வு பிரதான இடத்தைப் பிடித்துள்ள நிலையில், இது தொடர்பாக பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பிள்ளைகளின் விருப்பம் என்பதையும் தாண்டி அவர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் வழங்குவது அவசியமான ஒன்றாகும். ஒவ்வாமை நிலைமைகளுக்காக வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதுடன், அவற்றின் தன்மை பற்றியும் அறிந்திருப்பது அவசியமாகும்.

ஆரோக்கியமான முறையில் உணவு தயாரித்தல் மற்றும் அவற்றின் மீது சிறுவர்களின் நாட்டத்தை அதிகரிப்பதற்காக அவர்களையும் உணவு தயாரித்தல் செயற்பாடுகளில் சேர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றின் மூலமாக ஆரோக்கியமான உணவின் அவசியத்தை சிறுவர்கள் அறிந்து கொள்வதற்கு வழியேற்படும். ஒவ்வாமை நிலை என்பது சாதாரண விடயமாகப் பார்க்கப்பட்டாலும், பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவே வைத்திய நிபுணர்களால் அறிவுறுத்தப்படுகின்றது. எனவே அதற்குத் தகுந்தவாறு துரித உணவு பழக்கத்தை இயன்ற அளவுக்கு குறைத்துக் கொள்வது ஆரோக்கியமானதாகும்.

**ஹம்தா லதீப்...**
ஊடகக் கற்கைகள்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# மண்டானை மற்றும் காயத்ரி கிராமத்தில் சிரேஷ்ட பிரஜைகள் 200 பேர் கௌரவிப்பு

சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினம் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டதை முன்னிட்டு திருக்கோவில் பிரதேச காயத்ரி கிராமம் மற்றும் மண்டானை கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 200 சிரேஷ்ட பிரஜைகளுக்கு பரிசு வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது.





திருக்கோவில் சமூக தரிசன நிறுவனம்(SVO) இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது.

சமூக தரிசன நிறுவன ஸ்தாபக தலைவர் பி.நந்தபாலு தலைமையில் காயத்ரி கிராமம் சமூக தரிசன நிறுவனம் கேட்போர் கூடத்தில் நிகழ்வு நடைபெற்றது.

ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள், திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் கண. இராஜரெத்தினம் (கண்ணன்) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் பிரதேசசபை முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்திபன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

நிகழ்வில் கலந்து கொண்ட 200 சிரேஷ்ட பிரஜைகள் மாலை சூட்டி, பரிசு பொருள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# டெல்கித் தமிழ் வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை திறந்துவைப்பு



(களுத்துறை சுழற்சி நிருபர்)



மத்துகம கல்வி வலயத்துக்கு உட்பட்ட டெல்கித் தமிழ் வித்தியாலத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க வத்தளையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சண்முகராஜா சிவராஜாவின் நிதி உதவியில் வடிவமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை பாடசாலை அதிபர் லிங்கநாதன் தலைமையில் எஸ். சிவராஜாவால் பாடசாலை வளவில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஸ்ரீ இராமகிருஷானா தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் சுசில் சாந்த, பெலேந்த முஸ்லிம் வித்தியாலய அதிபர் சுகேந்திரநாதன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு இவ் வைபவத்தை சிறப்பித்தனர்.

# அமெரிக்காவில் நுளம்பால் பரவும் வைரஸ்

## ஒருவர் உயிரிழப்பு

அமெரிக்காவில் நுளம்புகளால் பரவும் வைரஸ் நோய் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்துள்ளார். அமெரிக்காவின் கனெக்டிகட் (Connecticut) மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவர் கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவரது தோட்டத்தில் பராமரிப்பு வேலை செய்துகொண்டிருந்த போது நுளம்பு அவரை கடித்துள்ளது. சாதாரண நுளம்புக்கடி என்பதால் இதை அவர் பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

சில தினங்களில் அவரின் உடல் நிலை மோசமடைய தொடங்கியுள்ளது. அவருக்கு கடுமையான ஒற்றைத்தலை வலியும், வாந்தியும் தொடர்ந்து ஏற்பட்டுள்ளது. நரம்பியல் சார்ந்த பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள், அவருக்கு நுளப்புக் கடித்தினால் ஏற்படும் Eastern equine encephalitis (EEE) என்ற வைரஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ளனர்.

# சர்வதேச ரோட்டரி கழகத்தின் போலியோ விழிப்புணர்வு பேரணி



சர்வதேச போலியோ தினத்தை முன்னிட்டு இலங்கையின் 5 ரோட்டரி கழகங்கள் இணைந்து மாபெரும் விழிப்புணர்வு பேரணியொன்றை ஞாயிற்றுக் கிழமை நடத்தியிருந்தன. (படம் எம் நஸார்)

# SMS மூலம் பண மோசடி; மக்களுக்கு எச்சரிக்கை




அரசாங்கத்தினால் பணம் வழங்கப்படுவதாக தெரிவித்து பொது மக்களின் பணத்தை மோசடி செய்யும் சம்பவங்கள் தற்போது இடம்பெற்றுள்ளதாக கணினி அவசர செயற்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் 50,000 ரூபாவை வழங்குவதாக குறிப்பிட்டு குறுஞ் செய்திகள், தற்போது போலியான செய்திகள் வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான இணைப்புகளை அணுகுவதையும் அந்த இணைப்புகளை (Link) மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதையும் தவிர்க்குமாறு கணினி அவசர செயற்பாட்டு அமைப்பின் சிரேஷ்ட பொறியியலாளர் சாருக தமுனுபொல, பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

## தலங்கம பகுதியில் STF சுற்றிவளைப்பு

# 29 அடையாள அட்டைகளுடன் பஸ் உரிமையாளர் ஒருவர் கைது



இலங்கைக்கு சட்டவிரோத சிகரெட் கடத்தல் தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, தலங்கமவில் பயணிகள் பஸ் உரிமையாளர் ஒருவரின் வீட்டில் பல்வேறு நபர்களின் 29 அடையாள அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் இருபத்து இரண்டு தேசிய அடையாள அட்டைகள், ஆறு சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் பொலிஸ் அடையாள அட்டைகள் என்பன இருந்தன.

இது தொடர்பான விசாரணையின் போது, பஸ்களில் கண்டெடுக்கப்பட்ட பணப்பைகளில் அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்தமை தெரியவந்துள்ளது. பணம் மற்றும் அடையாள அட்டைகள் அடங்கிய பணப்பைகளை வீசியெறிந்ததாகவும், பணப்பைகள் மற்றும் அடையாள அட்டைகளை உரிமையாளர்களிடம் வழங்காமல் தம்வசம் வைத்திருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன் மூலம் சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்துவதற்காக அடையாள அட்டைகள் மற்றும் சாரதி உரிமங்களை சேகரித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தலங்கம, கந்தவத்தை வீதியில் அமைந்துள்ள பஸ்ஸின் உரிமையாளர் என கூறப்படும் நபரொருவரின் வீட்டில் சட்டவிரோத சிகரெட்டுகள் இருப்பதாக கிடைத்த தகவலின் பிரகாரம், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சில்வாவின் தலைமையில் நேற்று சோதனை நடத்தப்பட்டது.

## சிறப்புரிமை, சலுகைகளை...

சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவித்துள்ளது. இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகள் சிலரும் ஏற்கெனவே இந்த குழுவிடம் விடயங்களை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பாக தற்போதுள்ள கட்டளை சட்டத்தை ஆராய்ந்து அது தொடர்பான பரிந்துரை வழங்குவதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் இந்தக் குழு அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்திரசிறி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் ஜயந்த புலுமுல்ல ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இது தொடர்பாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிக்கையில், இந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு சிறப்புரிமை தொடர்பாக தேவையான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தொடர்பான சட்டத்துக்கமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், மூன்று வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் தனிப்பட்ட செயலாளருக்கான ஊதியம் முதலான சிறப்புரிமைகளை கொண்டுள்ளனர். இருப்பினும் கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளின் கீழ் பல சலுகைகள் உள்ளடக்கப்பட்டு, நீர் கட்டணம், மின்சார கட்டணம் கூட அரசாங்க செலவில் செலுத்தப்பட்டன. இதற்கமைய ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் ஒவ்வொரு பாதுகாப்பு பிரிவுக்கும் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள், பாதுகாப்பு பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்புக்காக பொது பாதுகாப்பு அமைச்சு அல்லது வேறு ஏதேனும் அமைச்சகத்தால் ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையை இந்தக் குழு ஆராயும்.

இவர்களின் பாதுகாப்பு பிரிவுகளுக்கு வாடகை அடிப்படையில் கட்டடங்கள் பெறப்பட்டிருந்தால், மாதாந்த வாடகை மற்றும் வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாகவும் இந்தக் குழு ஆராயுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஏற்கெனவே விடயங்களை கேட்டறிந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச ஆகியோரின் இந்த சிறப்புரிமைகளுக்காக மூன்று வருடங்களில் (2022 – 2024) செலவிடப்பட்ட தொகை மத்திய வங்கி பதிவுகளுக்கமைய இருபத்து ஏழு கோடி ரூபாவென தெரியவந்துள்ளது. 2022ஆம் ஆண்டில் இந்தக் குழுவினரின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை ஏழு கோடி ரூபாவென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டில் இத்தொகை எட்டு கோடி ரூபாவிலிருந்து 11 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பூநகரி, சங்குப்பிட்டி ...

திருத்த வேலை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நேற்று (18) நண்பகல் 12.00 மணி முதல் எதிர்வரும் 3 நாட்களுக்கு இப்பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்தது. இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சேவைகளில் பயணிக்கும் பயணிகள் மாத்திரம் சில இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டி உள்ளதாகவும் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார். கனகர வாகன போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்று பாதையை பயன்படுத்துமாறும் பாதைக்கான திருத்த வேலை விரைவாக பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் அறிவிக்கப்பட்ட தினத்துக்கு முன்னர் கூட பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படுமெனவும் , அவர் மேலும் தெரிவித்தார்.

## காசாவில் கொல்லப்பட்டவர்...

இஸ்ரேலில் அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். 2011ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தத்தின்படி சின்வார் விடுவிக்கப்பட்டார்.

1,027 பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய அரேபிய கைதிகள், ஒரே ஒரு இஸ்ரேலிய பணயக்கைதியான இஸ்ரேல் இராணுவ வீரர் கிலாட் ஷாலிட் ஆகியோருக்கு ஈடாக சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார் சின்வார். அப்போது எடுக்கப்பட்ட அவரது பயோமெட்ரிக் பதிவுகள் இஸ்ரேல் வசம் உள்ளன. அதன்படி பல் அமைப்பின் மூலம் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சின்வார் பலியானது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்கள்

(19.10.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**ரிஷபம் :**
எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைக்கும். இனிப்பான செய்தி கிடைத்து இல்லத்தில் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்.

**மிதுனம்:**
மகிழ்ச்சி கொள்ளும்படி பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உறவினர்களும் தகுந்த நேரத்தில் உதவி செய்வார்கள்.

**கடகம்:**
நண்பர்களின் உதவி மகிழ்ச்சி அளிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை அடைவீர்கள்.

**சிம்மம்:**
வரவேண்டிய பணம் தாமதம் இன்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனபுரியாத மகிழ்ச்சி குடியேறும்.

**கன்னி:**
சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பேச்சை குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

**துலாம்:**
பணம் கைக்கு வருவதில் சிறுசிறு தாமதங்கள் ஏற்படலாம். பெண்களின் மரியாதைக்கு பங்கம் வராமல் நடந்து கொள்வதன் மூலம் நன்மைகளை அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
பணப்பரிவர்த்தனையில் நிதானப் போக்கும் அவசியம். வரவேண்டிய பணம் தாமதமாக வந்து சேரலாம்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்துடன் இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

**மகரம்:**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். எதிர்பார்த்தவைகள் சற்று தள்ளி போகலாம். வட திசையில் இருந்து வரும் தகவல் மனதுக்கு நிம்மதியை தரலாம்.

**கும்பம்:**
மனதில் சலனமும் செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம். அவசியமான காரியங்களை கவனமுடன் செய்வது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**மீனம்:**
எதிர்பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் கேட்ட உதவி செய்ய முடியாமல் அவர்களின் அதிர்ச்சிக்கு ஆளாகலாம்.

## நகர குடியிருப்பு அபிவிருத்தி...... 3 ஆம் பக்கத்தொடர்

திருகோணமலை மாவட்ட ஆளுநராகவும் அம்பாறை மாவட்ட மேலதிக ஆளுநராகவும் கடமையாற்றிய அசங்க அபேவர்தன, அரச நிர்வாக சேவையில் வினைத்திறன்மிக்க அதிகாரியாக 30 வருடங்களுக்கும் மேலாக பொதுச் சேவைகளுக்காக தன்னை அர்ப்பணித்தார். இந்நிலையில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் விஜயானந்த ஹேரத் மற்றும் அந்நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும்அவரது கடமை பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 2024 முதல் 8 மாதங்களில் ...

செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 624.67 பில்லியன் ரூபா வருமான வரியாகவும், 1,421.34 பில்லியன் ரூபா பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியாகவும் பதிவாகியுள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்பட்ட வரிகளில் பிரதான அங்கமாக இருந்த VAT வரி வருமானம் 842.48 பில்லியன் ரூபாவாக இருந்து 87.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தக் காலப்பகுதியில் கலால்வரி வருமானம் 385.74 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது 8 மாத காலப்பகுதியில் 42 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வரி அல்லாத வருமானம் 31.7 சதவீதத்தால் அதிகரித்து 209.26 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாகவும், நிதி அமைச்சு தெரிவித்தது. எவ்வாறாயினும் இந்த வருட இறுதிக்குள் மதிப்பிடப்பட்ட அரசாங்க வருமானம் 4,107 பில்லியன் ரூபாவாகுமெனவும், நிதி அமைச்சு சுட்டிக்காட்டியது.

## இலங்கையில் 60 மானிய...

விடயங்களிலுமான இந்தியாவின் நிலைப்பாட்டையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு வலுவான பங்காளித்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள தூதுவர், இரு நாடுகளின் பின்னிப்பிணைந்த நடைமுறைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். இரு நாடுகளையும் இணைக்கும் பகிரப்பட்ட புவியியல், வரலாறு மற்றும் எதிர்காலத்தை நோக்கிய CV இலங்கையின் 45ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் MP ...

தெரிவித்த அவர், தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாமெனவும் சி.ஐ.டி.யினர் விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமெனவும் பிவித்துரு ஹெல உறுமய தலைவரிடமும் கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ரவிசெனவிரட்ண நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் ஷானி அபேசேகர மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தமக்கு எந்தவித பிரச்சினையும் இல்லையெனவும், அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக பெருமளவான அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக சி.ஐ.டி.யினர் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கட்டும். அவர்கள் உண்மையை கண்டுபிடிப்பார்களென்று நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை அடிப்படையாக வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்காக உதய கம்மன்பில இந்த விடயத்தை கையில் எடுத்தாரா? எனவும், அவர் கேள்வியெழுப்பினார்.

## டீசலை பயன்படுத்தி ...

இரண்டும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் உப தயாரிப்புகள் என்றும் வேறு விநியோகம் இல்லாத காரணத்தால் இலங்கை மின்சார சபை இந்த எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யும் என்றும் இலங்கை மின்சார சுட்டிக்காட்டியுள்ளது

## வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில்... ...

இருப்பின் நீரில் இறங்க வேண்டாமென, சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் உத்பலா அமரசிங்க அறிவுறுத்தினார். இந்நிலையில் எலி காய்ச்சலுக்கான அறிகுறி தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுமாறும், அவர் தெரிவித்தார்.

எலிகளின் சிறுநீர் தண்ணீரில் கலப்பதால் காயங்கள் மூலம் எலி காய்ச்சல் கிருமி உடலில் உட்புகுந்து விடுமெனவும் இது மிகவும் ஆபத்தான நிலையெனவும், அவர் சுட்டிக்காட்டினார். கண்கள் சிவத்தல், காய்ச்சல், சிறுநீர் வெளியேறுதல் குறைதல், கடுமையான தலைவலி, தசைவலி ஆகிய அறிகுறிகள் எலி காய்ச்சலின் அறிகுறிகளெனத் தெரிவித்த வைத்திய நிபுணர், இந்த அறிகுறிகள் தொடர்ந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்வது மிகவும் அவசியமெனவும் மீண்டும் தெரிவித்தார்.

## குறைந்த வருமானம் கொண்ட ...

நிகர வருமானத்தை வரிசைப்படுத்தி பயன்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது அல்லது கூடுதல் மானியத்தில் சுமார் 8 பில்லியன் அமெரிக்க டொலரை உருவாக்குவதற்கான கையிருப்பு, அடுத்த ஐந்து ஆண்டுகளில் PRGT க்கான ஆதாரங்களும் உண்டு. ஏனைய சீர்திருத்த நடவடிக்கைகளுடன் இணைந்ததாகவும் கடந்த ஆண்டு வெற்றிகரமான இருதரப்பு நிதி திரட்டலாவதுடன், PRGT இன் நீண்டகால வருடாந்த கடன் நடைமுறையை சுமார் 3.6 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கவும் உதவும். அதாவது இது தொற்றுநோய்க்கு முந்தைய அளவை விட இரண்டு மடங்குகள் அதிகமானதாகும். பொது மற்றும் தனியார் ஆதாரங்களிலிருந்து கணிசமான கூடுதல் வினையூக்கிக்கு இது உதவும்" எனவும் அவர் குறிப்பிட்டார். குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் முன்னோடி திட்டம் எதுவும் இல்லாத தொடர்ச்சியான அதிர்ச்சிகளை சந்தித்துள்ளன. கணிசமான நிதி தேவைகளை எதிர்கொண்டுள்ளதுடன், இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான நேரத்தில் இடம்பெற்றுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தொகை, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு சிறந்த கொள்கைகளை செயற்படுத்துவதற்கும் வசதியாக வலுவான நிறுவனங்களை உருவாக்குவதற்கும் நிதியம் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்பதை உறுதிப்படுத்த தேவையான வளங்களை PRGT ஆதாரங்கள் உருவாக்கும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மேலும் தெரிவித்தார்.

தமிழ் ஆராய்ச்சி மாநாடு
2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 52

# வெற்றிகரமாக நிறைவடைந்த மாநாடு

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு வெற்றிகரமாக நிறைவுற்றதை இறுதி நிகழ்வு எடுத்துரைத்தது. நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்குவதும் பாராட்டி மகிழ்ந்தும், மகிழ்வித்தும் நிகழ்வில் முக்கிய அங்கமாக திகழ்ந்தது. நிறைவு தீர்மானத்தை நிகழ்வின் இணைத் தலைவர் பேராசிரியர் மு.இராசேந்திரன் நிகழ்த்தினார். நிகழ்வின் ஒழுங்கமைப்பில் அரங்கமே திருப்தி கொண்டிருந்தது. நிகழ்வு மூன்று நாட்கள், சுற்றுலா இரண்டு நாட்கள் என மொத்தமாக ஐந்து நாட்கள் என்ற வகையில் இருப்பிட தூரங்களை மறந்து நட்புகளை பகிர்ந்துகொண்டவர்களிடையே பிரிவு என்பது மனதிற்கு வருத்தத்தை தருவதாகவே அமைந்திருந்தது.

தமிழ் பணியில் ஒவ்வொருவரும் விசேட ஆளுமைகளாக விளங்கினார்கள். அவர்களுடன் தொலைபேசி மூல தொடர்புகள் மிக ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படுகிறது. ஊடகத்துறை மற்றும் ஆய்வுப்பணிகளில் ஈடுபடும் ஆளுமைகள் தமிழ் மொழி வளர்ச்சியில் செய்து வரும் பங்களிப்புகள் மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகின்றன. இம் மாநாடு இத்துறை ஆர்வலர்களால் மிகுந்த அவதானத்தையும் திருப்தியையும் பெற்றதாகவே அமைந்திருந்தது. இம் மாநாட்டை இத்தனை சிறப்பங்சங்களோடு செயற்படுத்தியதில் மாநாட்டின் செயலர் நந்தன் மாசிலாமணியின் உழைப்பு மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகிறது.

நந்தன் மாசிலாமணி கலைஞன் பதிப்பகம் ஊடாக தமிழ் பதிப்புத்துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருபவர். ஐம்பதுகளின் பின்னர் இவரின் தந்தையாரால் உருவாக்கப்பட்ட “கலைஞன் பதிப்பகம்” இதுவரையில் பல்லாயிரம் நூல்களை பதிப்பித்துள்ளது. பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இம் மாநாட்டை சார்ஜாவில் நடத்துவதற்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் இடம்பெற்றன. இம் மாநாட்டிற்கான பிரதான செயலாளராக நந்தன் மாசிலாமணியே தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே இம் மாநாட்டிற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். அம் மாநாட்டை சார்ஜா மாநகரில் ஏற்பட்ட சிக்கல் நிலைமையைத் தொடர்ந்தே மலேசியாவில் நடத்துவதற்கான முன்னெடுப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதற்கமைவாக திட்டமிட்டதன் விளைவாகவே பதினோராவது மாநாட்டின் வெற்றி திருப்திகரமாக அமைந்தது. நிகழ்வோடு இணைந்திருந்தவர்களால் நந்தன் மாசிலாமணி வெகுவாகவே பாராட்டப்பட்டார். இத்தகைய பெரும் பங்கினை ஆற்றிய அன்னார் அவையில் மிக சாதாரணமாகவே நடந்துகொண்டார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்தியக் கிளையின் செயலாளர் என்ற நிலையில் நந்தன் மாசிலாமணியின் பங்கேற்பும், பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இக் கிளையின் ஏற்பாட்டில் இம் மாநாட்டை நடத்துதற்கு அனுமதி வழங்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன தலைவருக்கு செயலாளர் என்ற வகையில் ஆத்மார்த்தமாக இவரது நன்றி உரைதல் அரங்கின் கவனத்தை பெற்றது.

பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், பங்கேற்பாளர்கள், அதிதிகள், ஆளுமைகள், மாணவர்கள், அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரை ஒருங்கிணைத்து செயற்பட்ட விதம் மிக முன்மாதிரியானதாகவே விளங்கியது. இவரின் அணுகுமுறைகள் மலேசிய செயற்பாட்டாளர்களின் உணர்வுபூர்வ பங்கேற்பையும் சிறப்பாகவே தூண்டியது எனலாம். நிகழ்வுகள், அரங்குகள், உபசரிப்புக் களங்கள் போன்றனவும் திருப்தியாகவே அமைந்திருந்தன. இத்தகைய செயற்பாடுகளுக்கு அனைவரையும் ஒருங்கிணைக்கும் பக்குவத்துடன் செயற்படும் இவ் ஆளுமையின் துணைவியாரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு அலட்டலும் இல்லாமல் பேராளர்களில் ஒருவரைப்போலவே அவரது துணைவியாரும் நடந்துகொண்டார். சுற்றுலா தளங்கள் உட்பட்ட, மாநாட்டு நிகழ்வுகளின் போதும் பங்கேற்பாளர்களுடன் இணைந்தே காணப்பட்டார். நிகழ்வின் இறுதித் தறுவாயில்தான் நந்தன் மாசிலாமணி அவரை இணைந்து காண முடிந்நது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் இருவருக்குமான உறவை அறிந்துக்கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியது. நந்தன் அவர்களின் செயல்திறனுக்கு அம்மையார் தருகின்ற ஒத்துழைப்பு முன் மாதிரியாகவே திகழ்ந்தது. இருவருடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டமை மிகுந்த திருப்தியைத் தருகிறது.

இப் பயணத்தில் எம்மோடு இணைந்து வந்த இலங்கையின் பதிப்புத்துறையின் முன்னோடிகளில் ஒருவரான 'பூபாலசிங்கம் புத்தகசாலை' நிறுவனத்தின் அதிபர் ஸ்ரீதர் சிங்கின் பங்கேற்பும் எமது அணியின் காத்திரத்திற்கு வலு சேர்த்தது எனலாம். அத்தோடு உலகறிந்த இலங்கையின் ஆளுமை கம்பவாரிதி இ.ஜெயராஜின் பங்கேற்பும் சிறப்புரையும் இலங்கை அணிக்கு மேலும் வலிமை சேர்ப்பதாக அமைந்தது. ஏனைய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் இலங்கை என்றவுடன் இ.ஜெயாராஜை அடையாளப்படுத்தியமை பெருமையாக இருந்தது.

சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் இடம்பெறும் தமிழ் நிகழ்வுகளில் தவிர்க்கப்பட முடியாத ஒருவராக அன்னார் விளங்கியமை இலங்கையர்கள் என்ற வகையில் பெருமைக்குரிய விடயமாகவே விளங்குகிறது.

மாநாட்டில் வெளியிடப்பட்ட சிறப்பு நூல்கள் முக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன. அவ்வாறே ஆய்வுச் சுருக்கக் கோவை 01 வெளியாகியுள்ளமையும் முக்கியத்துவம் பெறுகிறது. மாநாட்டின் செயலர் என்ற வகையில் நந்தனது பதிப்புரையுடன் இத் தொகுப்பில் வெளியாகியுள்ளது. இத் தொகுப்பு வெளிவருவதற்கு பதிப்பாசிரியர் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் அடையாளத்திற்கு உரியவர்களாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

முனைவர்களான த.மாரிமுத்து, எஸ்.மணிமாறன், அரங்க பாரி, சே.செந்தமிழ்ப் பாவை, ஆர்.மீனாகுமாரி, எஸ்.பாலசுப்ரமணியம், சி.சித்ரா, அபிதா சபாபதி, உ.அலிபாவா, பா.ஷீலா, பா.இரவிக்குமார், த.க.ஜாஸ்மின் சுதா, ச.இரவி, போ.சத்திய மூர்த்தி ஆகியோர் பதிப்பாசிரியர் குழுவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தொகுப்பில் நானூற்றுதொன்னூற்று நான்கு ஆய்வுத்தலைப்புகளில் சுருக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு வரலாற்றில் பல தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் வரிசையில் முதல் முறையாக மலையக சமூகத்தையும் அடையாளப்படுத்தும் வகையில் ஆய்வுச்சுருக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

389ஆவது ஆய்வுச்சுருக்கமாக 'மலையக தமிழ் இலக்கியத்தின் செல்நெறிகள்' எனும் தலைப்பிலான எனது ஆய்வுச்சுருக்கமே இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. அத்தோடு இவ் ஆய்வரங்கில் 'அறுபதுகளின் பின்னரான மலையக நாடக முன்னெடுப்புகள்' எனும் தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரையை முன்வைத்தேன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மலேசியா ஓம்ஸ் அறவாரியம் போன்ற அமைப்புகளின் பங்கேற்பு முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. இப் பணியோடு இணைந்த பல்கலைக்கழகங்களின் பங்கேற்பும் அவதானத்திற்குரியதாகும். அவ்வகையில் மலாயா பல்கலைக்கழகத்தில் நடத்தியதில் பெரும் பங்கை இப் பல்கலைக்கழகம் பெற்றுக்கொள்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், புதுவைப் பலகலைக்கழகம், திருவாரூர் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் ஆகியவற்றோடு மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இம் மாநாட்டை நடத்துவதற்கு பங்களிப்புகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மலேசியாவில் ஒரு வார அனுபவம்.


கிடைத்த சந்தர்ப்பங்களில் பார்வையிட்ட இடங்கள். சந்திக்க கிடைத்த ஆளுமைகள். நல்ல நட்புகளின் அறிமுகம் என்றவாறு இப் பயணம் மிக வாய்ப்பாகவே அமைந்தது. அறிமுகமானவர்களுக்கு விடை கொடுத்து 24.07.2023 அதிகாலை கோலாலம்பூர் விமானம் நிலையம் நோக்கி அழைத்து செல்லப்படுகிறோம். இப் பயணத்தில் வழிகாட்டிகள் சிறப்பாக பணியாற்றியிருந்தார்கள்.

மலேசியாவில் பெண்களும் வழிகாட்டிகளாக (பயண ஆற்றுப்படுத்துனர்கள்) கடமையாற்றுகிறார்கள். விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லும் பொறுப்பில் மேரி என்ற பெண்மணியே பணியில் இருந்தார். அவருக்கும் விடை கொடுத்து விமான நிலைய நடைமுறைகளை நிறைவு செய்து எயார் ஏசியா விமானத்தில் இலங்கை நோக்கி பயணிக்கிறோம். அருகில் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தனுடன் மலையக இலக்கியம் தொடர்பில் பல விடயங்களைப் பேசிக்கொண்டு வருகிறோம்.

இக் களம் மலையகம் தொடர்பான முன்னெடுப்புகளுக்கு பெரிதும் வாய்ப்பாக அமைந்தது. காலை 9 மணி இலங்கை, கட்டுநாயக்க விமான நிலையம் எம்மை வரவேற்றது. தாய் மண்ணை வந்தடைந்ததில் மட்டற்ற மகிழ்ச்சியை உணர்ந்தேன். எங்கள் அணி உறுப்பினர்களிடம் விடை கொடுத்த நிலையில் நூலகர் இரா.மகேஸ்வரனது வாகனத்தில் கண்டி நோக்கி விரைகிறோம். நாவலப்பிட்டி, வீடு என்ற நகர்வில் பிள்ளைகளையும் மனைவியையும் பார்த்ததில் மிகுந்த மகிழ்வை உணர்ந்தேன்.

ஊருக்கு வரும் போது ஆலய பரிபாலன சபையினரும், இளைஞர்களும் இணைந்து வாழ்த்துக்கூறிய பெனர் என்னை வரவேற்றது. நான் வருவதை அறிந்தவுடன் ஊரிலுள்ள நட்புகள் வீட்டிற்கு வந்து நலம் விசாரித்தார்கள். இரவு 7 மணிக்கு கோயிலுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். கோயிலுக்கு சென்ற போது விசேட பூசையோடு மாலைகள், பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தார்கள். மகிழ்வைத் தந்த விடயமாக அது அமைந்திருந்தது. இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நன்றி கூறி உரையாற்றினேன்.

இந் நிகழ்வில் ஒன்று கூடிய இளைஞர்கள் கல்லாறு இளைஞர் விளையாட்டுக் கழகத்தில் அங்கம் வகித்தவர்கள். இக் கழகம் 1995.05.05ம் திகதி எனது பதினேழாவது வயதில் என்னால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இவ் அமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய நண்பன் அமரர் சிவராஜாவை நினைவு கூர்ந்தேன். அவ் அமைப்பின் ஸ்தாபகர்களான எம்.இரட்ணசபாபதி, எஸ்.தியாகராஜா ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார்கள். இவ் அமைப்பே தோட்டப்புறங்களில் இருந்து பஸ்பாகே கோரளை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட முதலாவது அமைப்பாகும்.



'இளைய சக்தி' எனும் பெயரில் சிறப்பிதழ்களையும் வெளியிட்டுள்ளது. கூடியிருந்த இளைஞர்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்து என்னில் காணப்படும் வாசிப்பு பழக்கம் தான் உயர்வான இடத்திற்கு கொண்டு சென்றது. ஊரில் ஒரு வாசிகசாலையை அமைப்போம். முதற் கட்டமாக சுழற்சி முறையில் பத்திரிக்கை வாங்கி வாசிப்பு பழக்கத்தை நமது ஊரில் ஆரம்பிப்போம் என்றேன்.

ஒரு வாரம் கூட ஆகாத நிலையில் ஒகஸ்ட் 01ஆம் திகதி கல்லாறு சனசமூக நிலையத்தில் வாசிகசாலை ஆரம்பமானது. பத்திரிக்கை மட்டுமல்ல குறுகிய காலத்தில் பல நூல்களும் கிடைக்கப்பெற்றன. பத்து வருடங்களுக்கு முன்னர் இச்சனசமூக நிலையத்தை பெற்றுக்கொளவதற்கு எடுத்த முயற்சியின் பயனாக இந் நூலகம் அமையப்பெற்றமையை மனம் திருப்தியோடு நோக்கியது. தம்பி பாபு சுதாகரின் அக்கறை மிக்க பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நூலக தொடக்கத்தின் போது எமது ஊருக்கு அவசியமான மரண நலன்புரி அமைப்பு ஒன்றை அமைப்பதற்கு முயற்சிப்போம் என்ற கோரிக்கையை முன்வைத்தேன். அதனையும் அரங்கில் இருந்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். பின்னர் அவ் அமைப்பிற்கான யாப்பு ஒன்றையும் எழுதினேன். அவ் அமைப்பும் உருவாக்கப்பட்டது. நூலகமும், நலன்புரி அமைப்பும் சில சமூக காரணங்களுக்காக இயங்காமல் இருக்கின்றமை வேதனையளிக்கிறது.

மலேசியா எவ்வாறான புதுமையான அனுபவங்களைத் தந்ததோ அது போலவே இலங்கைக்கு வருகைத் தந்ததன் பின்னர் பல கசப்பான அனுபவங்களால் அவதியுற்றேன்.

மலேசியாவில் உணவு வேளைகள் மிகத் திருப்திகரமாக அமைந்திருந்தது. ஆனால் அடுத்த வாரங்கள் நேரத்திற்கு மற்றும் முறையான உணவு இன்மையால் மிகவும் சிரமப்பட்டேன். குடும்ப சூழலும், ஊர்ச் சூழலும் பற்றிய தவறான புரிதலால் மிக வேதனையை அனுபவித்தேன். என்னில் உள்ள தூய சிந்தனை, தூர நோக்கு, திடமான மன உறுதி என்பன என்னைப் பக்குவப்படுத்தியது.

வேறு ஒருவராக இருந்திருந்தால் தற்கொலைக்கு துணிந்திருப்பார். எழுத்து, சமூக, ஆய்வுப் பணிகளை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் தியாகங்களோடு முன்னெடுக்கிறேன். இம் மன நிலையோடு வழமையாக பாடசாலைக்கு செல்லும் பஸ்ஸில் ஏறியபோது சுவாரஸ்யமான சம்பவம் இடம்பெற்றது. பழக்கமான ஒருவர் என்னை பார்த்து அதிசயித்தவாறு உங்கள் ஊரில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகையில் உங்கள் படம் இருந்தது.

நீங்கள் இறந்து விட்டீர்களோ என நினைத்து கவலைப்பட்டேன் என்றார். எனக்கு சிரிப்பு வந்தது. என்னை வாழ்த்தி காட்சிப்படுத்திய பதாகையை தூரத்தில் இருந்து பார்த்து முடிவெடுத்துள்ளதை அறிந்துகொண்டேன். பிறகு அவரிடம் தெளிவு படுத்தினேன்.

மனதிற்கு வேதனையான வேளையில் தான் நான் கல்வி கற்ற நாவலப்பிட்டி கதிரேசன் மத்தியக் கல்லூரில் என்னை அழைத்து கௌரவப்படுத்தினார்கள். கல்லூரி அதிபர் .டி.நாகராஜாவின் உயரிய பங்களிப்பை பெரிதும் மதிக்கிறேன். அவ்வாறே தொலஸ்பாகை, கலமுதுனை தோட்டத்தில் மக்கள் நலன்புரி அமைப்பினர் அழைத்து என்னை வாழ்த்தி மகிழ்ந்தார்கள். எந்த சமூகத்தின் உயர்வுக்காக நமது பணி உள்ளதோ, அச் சமூகம் எம்மை வாழ்த்தும் போது மிகுந்த திருப்தியை உணர்ந்தேன். இதன் பின்னணியில் தம்பி பெரியண்ணன் சந்திரமோகனின் தூர நோக்கை பெரிதும் மதிக்கிறேன்.

அவ்வப் போது முகநூல் பதிவுகளுக்கு கிடைக்கும் தூண்டல்கள் திருப்தியை தருவதுண்டு. முகநூல்களில் நமது சமூக முன்னோடிகள் தேவையில்லாத பதிவுகளுக்கு கருத்திடுவார்கள். ஆரோக்கியமான பதிவுகளை புறக்கணித்து விடுவார்கள். மலையகம் ஒருமைப் படாமைக்கு இதுவும் காரணம் என ஆய்வுக்குட்படுத்தும் சந்தர்ப்பம் விரைவில் வரலாம்.

மனதிற்கு நெருடலை ஏற்படுத்திய இக் கட்டான சந்தர்ப்பத்தில்தான் இப் பயணத்தை பதிவுகளாக்க வேண்டும் என முனைந்தேன். முகநூல் நண்பரான தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரிடம் தொலைபேசி மூலமாக வினவினேன். மறுப்பேதுமின்றி சம்மதித்தார். முகநூலில் எனது பதிவுகளை வாழ்த்துவார், கருத்துக் கூறுவார். அவரின் சம்மதத்தால் 52 வாரம் (ஒரு வருடம்) இத் தொடர் தொடர்ந்தது.

சிக்கலான நேரத்திலும் காத்திரமான முடிவு நோக்கி நகர வேண்டும் என்ற திடம் மீது நான் திருப்தி கொள்கிறேன். என்னை வழிப்படுத்துவதில் தன்நம்பிக்கையும், இறைநம்பிக்கையும் நிறையவே உதவியிருக்கிறது.

முற்றும்



*உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மலேசியா ஓம்ஸ் அறவாரியம் போன்ற அமைப்புகளின் பங்கேற்பு முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. இப் பணியோடு இணைந்த பல்கலைக்கழகங்களின் பங்கேற்பும் அவதானத்திற்குரியதாகும். அவ்வகையில் மலாயா பல்கலைக்கழகத்தில் நடத்தியதில் பெரும் பங்கை இப் பல்கலைக்கழகம் பெற்றுக்கொள்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், புதுவைப் பலகலைக்கழகம், திருவாரூர் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் ஆகியவற்றோடு மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி குழுமம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இம் மாநாட்டை நடத்துவதற்கு பங்களிப்புகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இந்தியக் கிளையின் செயலாளர் என்ற நிலையில் நந்தன் மாசிலாமணியின் பங்கேற்பும், பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இக் கிளையின் ஏற்பாட்டில் இம் மாநாட்டை நடத்துதற்கு அனுமதி வழங்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன தலைவருக்கு செயலாளர் என்ற வகையில் ஆத்மார்த்தமாக இவரது நன்றி உரைதல் அரங்கின் கவனத்தை பெற்றது. பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், பங்கேற்பாளர்கள், அதிதிகள், ஆளுமைகள், மாணவர்கள், அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரை ஒருங்கிணைத்து செயற்பட்ட விதம் மிக முன்மாதிரியானதாகவே விளங்கியது. இவரின் அணுகுமுறைகள் மலேசிய செயற்பாட்டாளர்களின் உணர்வுபூர்வ பங்கேற்பையும் சிறப்பாகவே தூண்டியது எனலாம். நிகழ்வுகள், அரங்குகள், உபசரிப்புக் களங்கள் போன்றனவும் திருப்தியாகவே அமைந்திருந்தன. இத்தகைய செயற்பாடுகளுக்கு அனைவரையும் ஒருங்கிணைக்கும் பக்குவத்துடன் செயற்படும் இவ் ஆளுமையின் துணைவியாரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்தார் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ

**கந்தளாய் தினகரன் நிருபர்**



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பேட்ரிக்குக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரவுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று நேற்று முன்தினம் (17) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநருக்கு தனது வாழ்த்தை தெரிவித்ததுடன், கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு பிரித்தானிய அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாகச் செயற்படவும், சுகாதாரம், கல்வி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகளின் அபிவிருத்திக்காக முதலீடுகளை மேற்கொள்வதாகவும் தான் நம்புவதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். மேலும், பிரித்தானிய அரசாங்கம் மிகவும் நம்பிக்கையுடனும், தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நிர்வாகத்தை மிகவும் பாராட்டுவதாகவும் தெரிவித்த பிரித்தானிய உயர்ஸ்தானிகர், எதிர்காலத்தில் இலங்கை மற்றும் கிழக்கு மாகாண அரசுடன் மிகவும் இணக்கமாக செயற்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய கலப்பு இனங்களோடு கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை செவிமடுத்து, கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தி குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வைக் காண எதிர்பார்ப்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் கல்முனை வலயம் 2ஆம் இடம்; கல்வி செயலாளர் பாராட்டு

**காரைதீவு குறூப் நிருபர்**



அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தில், கல்முனை வலயம் இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளது.

அதனைப் பாராட்டும் முகமாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பி.திசாநாயக்க பாராட்டு சான்று பத்திரத்தை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமிற்கு வழங்கி வைத்தார்.

இதன்போது கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமாரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்கைபிரோ கணித சவால் போட்டியில்

# தங்கப்பதக்கத்தை வென்று திருமலை மாணவன் சாதனை

**திருகோணமலை தினகரன்**



திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் தி.ரகீசன், கனடாவில் நடைபெற்ற ஸ்கைபிரோ தனிநபர் கணித சவால் 2024 போட்டியில், தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

மேலும், அதிக புள்ளிகளை பெற்றமைக்கான விருதினையும் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

தி.ரகீசன் கடந்தாண்டு (2023) நடைபெற்ற தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில், சிறப்பு சான்றிதழையும் தன்வசப்படுத்தினார். அத்துடன், 2023 தேசிய மட்ட கணித வினாடி வினா போட்டியிலும் 3 தங்கம், 1 வெண்கலம் ஆகிய பதக்கங்களையும் அவர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை தமிழ் மக்களின் இருப்பை இல்லாமலாக்க தமிழரசுக்கட்சி துணை

## ஜ.த.தே.கூ. வேட்பாளர் சோ.புஸ்பராசா

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**



தேசியம் எனும் போர்வைக்குள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பை இல்லாமல் செய்யும் செயற்பாட்டுக்கு தமிழரசுக்கட்சியினர் துணை போயுள்ளதாக, சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சோ.புஸ்பராசா தெரிவித்தார்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவட்ட செயலாளர் வசந்தன் தலைமையில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று (18) அக்கரைப்பற்றில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கட்சிகள் யாவும் தமது கட்சிகளை மறுசீரமைப்பு செய்யுங்கள். கடந்த காலத்தை போலன்றி தற்போது தொழிநுட்பம் கூடிய காலம். முழு உலகத்தையும் கைத்தொலைபேசியில் காணும் காலம். இவற்றுக்கேற்றவாறு நாமும் மாற வேண்டியுள்ளது.

அம்பாறையில் ஒரு பிரதிநிதிக்காக 150 பேர் தமிழ் பிரதேசத்தில் போட்டியிடுகின்றனர். 14 வீதம் தமிழ் மக்கள் வாழும் அம்பாறையில் இது சாத்தியமில்லை என்பதற்காக அனைவரையும் ஒற்றுமைப்படுத்த பல சமூக அமைப்புக்கள், ஆலய நிர்வாகங்கள் கடைசி நிமிடம் வரை முயற்சி எடுத்தது.

அதனை சிதைத்தவர்கள் தமிழரசுக் கட்சியினர். எதிர்கால சந்ததிகளின் நலன் கருதாமல் விட்டுக்கொடுப்புக்கு இடமின்றி தனித்து நிற்க தீர்மானித்தனர். இவர்கள் ஏற்கனவே பாராளுமன்றம் சென்று மக்களது குறைகளை தீர்க்காது, மீண்டுமொரு சந்தர்ப்பத்தை கோருகின்றனர். இதற்கான தீர்ப்பை மக்களே வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்தின்

# பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

கிழக்கு மாகாணத்தின் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு, ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவினால், புதிய உறுப்பினர்கள் நேற்று (18) நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, முன்னாள் திருகோணாமலை மாவட்ட செயலாளர் பி.எச். என்.ஜெயவிக்ரம இந்த ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய அங்கத்தவர்களாக, முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் அருந்தவ ராஜா, முன்னாள் அம்பாறை பிரதேச செயலாளர் ஜி.எல்.ஆரியதாச, ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.ஹமீத் ரிபாய்டீன் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உதவி கட்டுப்பாட்டாளர் முகமட் இக்ரிமா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமன கடிதங்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மார்பகப் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியொன்று முன்னெடுப்பு



**ஒலுவில் விசேட நிருபர்**

சர்வதேச மார்பகப் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம் என்பன இணைந்து, மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு பேரணியொன்றை முன்னெடுத்திருந்தது.

இப் பேரணி, சுகாதார வைத்தியதிகாரி டொக்டர். உவைஸ் பாரூக் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி பொத்துவில் நகரில் நடைபெற்றது.

சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திலிருந்து ஆரம்பமான பேரணி, மார்பகப் புற்றுநோயை எவ்வாறு கண்டறிவது அதற்கான சிகிச்சை முறைகள் போன்ற விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு பிரதான வீதியீடாக சென்றது.

இதன்போது, மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலே அறிந்து கொள்வதன் மூலம், இந் நோயை முற்றாக குறைக்காலாம் என சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் உவைஸ் பாரூக் தெரிவித்தார்.

இலங்கையில் அதிகமான பெண்கள் மார்பக புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையின் மூலம் அறிய முடிகின்றது. பெண்கள் மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்று நோய்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். இதனை நேர காலத்துடன் கண்டு பிடித்து சிகிச்சையளிப்பதன் மூலம் இந் நோய் பரவாமல் கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் திருட்டு தகவல் வழங்குமாறு கோரிக்கை

திருகோணமலை, கடல்முக வீதியிலுள்ள அம்முச்சி கடைக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த கடை உரிமையாளரின் மோட்டார் சைக்கிளொன்று திருட்டுப்போன சம்பவமொன்று கடந்த 04.09.2024 திகதியன்று இடம்பெற்றுள்ளது.

திருடிச்சென்ற நபர், தொலைபேசி பேசிக்கொண்டே மோட்டார் சைக்கிளுக்கு அருகில் சென்று, தனது மோட்டார் சைக்கிளைப்போன்றே திருடிச் சென்றுள்ள காட்சி அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

சிகப்புநிற HERO வகை Pleasure (NP BCV 6374) மோட்டார் சைக்கிளை அல்லது திருடியவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தோர், 0762648766 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

# பாராளுமன்றத் தேர்தலில் வேறு விரலில் மை பூசுவதற்கு தீர்மானம்

## தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் சிந்தக

**காரைதீவு குறூப், அட்டாளைச்சேனை விசேட நிருபர்கள்**



ஜனாதிபதி தேர்தலில், பூசிய மை அழியாமலிருக்கலாம் என்பதற்காக, நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வேறொரு கைவிரலில் மை பூசப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக உடகம தெரிவித்தார் .

தேர்தல்கள் திணைக்களம், அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் என்பன இணைந்து, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கை நேற்று (18) வெள்ளிக்கிழமை அம்பாறையில் நடத்தியது.

இக்கருத்தரங்கு, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, எதிர்வரும் தேர்தல் தொடர்பாக பல சட்ட திட்டங்கள், ஊடகவியலாளர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள், வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக ஆராயப்பட்டன.

ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சம வாய்ப்பினை வழங்குவதுடன் பக்கச்சார்பின்றி கடமையாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், உதவி தேர்தல் ஆணையாளர் கசுன் அத்தநாயக்க மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சின் உதவி பணிப்பாளர் திலகரத்ன, நீதிக்கும் புலனாய்வுக்குமான மேலதிக ஆணையாளர் குலரத்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் முதல் தேர்தல் பிரசார கூட்டம் ஆரம்பம்





**துறைநீலாவணை நிருபர்**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாக சங்கு சின்னத்தில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சோ.புஸ்பராசா தனது முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தினை கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்தார்.

ஆலையடிவேம்பு ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற பூஜை வழிபாட்டு ஆராதனைகளுடன் அவர் தனது முதலாவது தேர்ல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின்அம்பாறை மாவட்ட செயலாளர் வசந்தன் தலைமையில் இடம்பெற்ற இக்கூடத்தில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களான சோ.புஸ்பராசா சுப்பிரமணியம் தவமணி பா.பரமேஸ்வரன் மற்றும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் இரா.இராஜேந்திரா, முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சீ.செல்வராசா, த.கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல் செயலமர்வொன்று, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நடைப்பெற்றது.

இக் கலந்துரையாடல், உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.ஏ.எம். சுபியானின் ஒழுங்கு படுத்தலின் கீழ், ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திண்மக் கழிவகற்றல் வாகனங்களை துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை

**கல்முனை விசேட நிருபர்**



கல்முனை மாநகர சபையில் பழுதடைந்துள்ள திண்மக் கழிவகற்றல் சேவை வாகனங்களை, துரிதமாக திருத்தி முடிக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவைக்குரிய வாகனங்களில், ஒரு கொம்பெக்டர் மற்றும் 04 உழவு இயந்திரங்கள் உட்பட 06 வாகனங்கள் பழுதடைந்துள்ளன.

இதனால், திண்மக் கழிவகற்றல் சேவையை முன்னெடுப்பதில் பாரிய அசௌகரியங்கள் ஏற்படுவதாக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் மாநகர ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, வாகன திருத்தும் தளத்துக்கு இன்று (18) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த மாநகர ஆணையாளர், சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இயந்திர திருத்துனர்களுக்கு வாகனங்களை துரிதமாக திருத்தி முடிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், இவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்களை துரிதமாக கொள்வனவு செய்து வழங்குமாறும் திருத்துனர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

# தமிழ் அரசியல் பரப்பில் முழுமையான மாற்றத்தையே மத தலைவர்களும் விரும்புகின்றனர்

## சட்டத்தரணி வி.மணிவண்ணன்






**பருத்தித்துறை, யாழ்.விசேட நிருபர்கள்**

தமிழ் அரசியல் பரப்பில் முற்றுமுழுதான மாற்றத்தையே மத தலைவர்களும் விரும்புவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியினர் நல்லை ஆதீன குருமுதல்வர் மற்றும் யாழ் . மறைமாவட்ட ஆயர் ஆகியோரை நேரில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

தமிழ் மக்கள் கூட்டணியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் சக வேட்பாளர்கள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை நல்லை ஆதீனத்திற்கு சென்று, குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றதுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். அதனை தொடர்ந்து ஆயர் இல்லத்திற்கு சென்றவர்கள் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து ஆசீர்வாதம் வாங்கியதுடன், கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் மணிவண்ணன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து, ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டோம். அவருடனான கலந்துரையாடலின் போது, அவர் தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டதாகவும் , அவர்களின் போக்குகள் மாறி விட்டதாகவும் எம்மிடம் குறைபட்டுக்கொண்டார்.

மேலும் தமிழ் அரசியல் பரப்பில் மாற்றம் ஒன்று நிகழ வேண்டும் என தான் விரும்புவதாக சொன்னார்.

அவரை தொடர்ந்து யாழ்.ஆயரை சந்தித்து ஆசீர்வாதம் வாங்கினோம். அவரும் முற்றுமுழுதான மாற்றத்தையே விரும்புகிறார். நாமும் அதனை வரவேற்று, எமது வேட்பாளர்கள் தொடர்பிலும் அவர்களின் தகைமைகள் ஆளுமைகள் தொடர்பில் எடுத்து கூறி இருந்தோம்.

மததலைவர்கள் போன்று தமிழ் மக்களும் மாற்றத்தையே விரும்புகிறார்கள். அதனால் எமக்கு வாக்களித்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென மணிவண்ணன் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# பல்கலைக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**




யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பிரிவில் 2023ஆம் ஆண்டு க.பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

விடியல் அமைப்பினால் இந்த கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் க.பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள ஏனைய மாணவர்களுக்கும் உற்சாக மூட்டும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர் ரொபின்ஸன் கலந்துகொண்டதுடன், ஆசிரியர்களான எஸ். பிரதீபன், ஆர். தர்சன், திருக்குமாரன் ஆகியோரும், சட்டத்தரணிகளான சுரேக்கா, உஷாந்தினி ஆகியோரும் விடியல் அமைப்பினரும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# கிராம அலுவலர்களை அறிவுறுத்தும் தேர்தல் முன்னாயத்த செயலமர்வு

**பருத்தித்துறை, யாழ்.விசேட நிருபர்கள்**



பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிராம அலுவலர்களை அறிவுறுத்தும் முன்னாயத்த செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைக்கு சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர்களுக்கு நன்றியை தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கமைய நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் கடமைகளில் வினைத்திறமையாக பங்களிப்பை வழங்குமாறும் கேட்டுக்கொண்டதுடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாகவிருந்த காரணத்தினால் வாக்காளர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான ஒத்துழைப்பை கிராம அலுவலர்கள் வழங்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார். பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலகர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவி தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜினால் விளக்கமளிக்கப்பட்டது. இச் செயலமர்வில் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வன்னி மாவட்டத்தில் தேர்தல் வாக்களிப்பை ஒத்திவைக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு

**வவுனியா விசேட நிருபர்**

வன்னி மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பை ஒத்திவைக்குமாறு கோரி மனுவொன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக தேசிய கூட்டணி என்ற கட்சி சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் இவ்வாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியை சேர்ந்த பரராஜசிங்கம் உதயராசா என்பவரும் வேறு இருவரும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். தங்கள் மனு நிராகரிக்கப்பட்டமை சட்டவிரோதமானது எனவும் தேவையான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில்

# கட்டுக்கரை குளத்தின் கீழ் 31 ஆயிரத்து 339 ஏக்கர் பெரும்போக செய்கை

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரை குளத்தின் கீழ் 31 ஆயிரத்து 339 ஏக்கர் பெரும்போக செய்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் வயல் நிலங்களுக்கான பெரும்போக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டம் நேற்றைய தினம் (18) உயிலங்குளத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில்,பிரதேச செயலாளர்கள்,அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது விவசாய குழு,அதனுடன் இணைந்த 30 விவசாய அமைப்புகள் அழைக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக பயிர்ச்செய்கைக்கு உத்தேசிக்கப்பட்ட நிலப்பரப்பாக இவ்வருடம் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலம் பெரும்போக நெற்செய்கைக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைவாக இவ்வருட பெரும்போக விவசாய தயார்படுத்தலுக்காக எதிர்வரும் 27ஆம் திகதி முதலாவது நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.விதைப்பு இறுதித் திகதியாக நவம்பர் 4ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 27.11.2024 தொடக்கம் கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயம் செய்வோருக்கு நீர் விநியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று அறுவடை ஆரம்பிக்கப்படுகின்ற திகதியாக அடுத்த ஆண்டு மார்ச் 3ஆம் திகதி என தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெரும்போக நெற் செய்கையை கருத்திற் கொண்டு கால்நடைகளை கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்குள் கால்நடைகளை விட வேண்டாம் என்று கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பெரும்போக செய்கைக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை மீறி அத்துமீறி நீர்ப்பாசன குளங்களுக்கு சொந்தமான குளக்காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் தமது பெரும்போக நெற் செய்கையை முன்னெடுக்குமாறு இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி பெண் வேட்பாளர்கள் யாழ். வணிகர் கழகத்தினரை சந்தித்து கலந்துரையாடல்

**யாழ்.விசேட நிருபர்**




ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பெண் வேட்பாளர்கள் யாழ்ப்பாண வணிகர் கழகத்தினரை நேற்றைய தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் பாராளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் போராளியான கருணாநிதி யசோதினி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட பெண் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் மற்றும் யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் ஆகியோர் கலந்துரையாடினர்.

இதன்போது எதிர்வரும் தேர்தலில் பெண் வேட்பாளரின் முக்கியத்துவம், பெண்களை அரசியலில் ஈடுபடுவதன் நோக்கம் மற்றும் பெண்களின் ஏன் அரசியலில் ஈடுபட வேண்டும். என்பது பற்றி கலந்துரையாடப்பட்டன. இதன்போது கட்சியின் ஆதரவாளர்கள், போராளிகள் நலன்புரிச் சங்க தலைவர் ஈஸ்வரன், தமிழ் தேசிய செயற்பாட்டாளர் குழுமம் முன்னாள் போராளிகள், யாழ்ப்பாண வணிகர் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காங்கேசன்துறை ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மேற்கு, ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யுத்தம் காரணமாக வலிகாமம் வடக்கு பகுதியில் வசித்து வந்த மக்கள் 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

சுமார் 31 வருடங்களின் பின்னர் அப்பகுதி மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிகள் வழங்கப்பட்ட நிலையில், ஐயனார் ஆலயம் மீள அப்பகுதி மக்களால் புனரமைப்பு செய்யப்பட்டு, புதிதாக பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகள் அமைக்கப்பட்டு புதுப் பொழிவுடன் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னிட்டு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை விநாயக வழிபாட்டோடு கிரியைகள் ஆரம்பமாகியுள்ளது.

இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களாக விநாயக வழிபாட்டுடன் எண்ணெய் சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை காலை 6:30 மணிமுதல் விநாயக வழிபாட்டுடன் மஹா கும்பாபிஷேக பூஜைகள் ஆரம்பமாகி கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுயேச்சை குழுவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு



யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கரும்பலகை சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை குழுவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றைய தினம் யாழில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழ் தேசத்தின் வரலாற்றில் மாணவப் போராளியாகப் போராடி தன்னுயிர் நீத்த பொன்.சிவகுமாரனின் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன், சிவகுமாரனின் சகோதரியிடம் தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து, தமது தேர்தல் பிரசாரங்களை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளனர்.

# யாழில். நிமோனியாவால் பெண் உயிரிழப்பு

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சலினால் பெண்ணொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கை சேர்ந்த சுதர்சினி (வயது 44) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

# மன்னாரில் தமிழரசு கட்சி தேர்தல் அலுவலகம் திறப்பு

**மன்னார் குறூப் நிருபர்**



பாராளுமன்ற தேர்தலுக்கான தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்டத்துக்கான பிரதான கட்சி அலுவலகம் நேற்றுமுன்தினம்(17) மாலை மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் வைபவரீதியாக தமிழரசு கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேஸனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாகவும் கட்சி சார்ந்த தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவும் மேற்படி காரியாலயம் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம் தமிழரசு கட்சியின் இளைஞர்களுக்கான கூட்டமும் மன்னார் தனியார் விடுதியில் நடைபெற்றது. மன்னார் மாவட்டத்திலுள்ள தேவன்பிட்டி, வட்டகண்டல், வெள்ளிமலை, சாந்திபுரம், தலைமன்னார், பேசாலை, முருங்கன் உள்ளடங்களாக பல கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் குறித்த ஒன்றுகூடலுக்கு வருகை தந்து தங்களது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதேநேரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வைத்தியருமான சிவமோகன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சட்டத்தரணி செல்வராஜ டினேஸனுக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தார்.




# இரத்தினபுரியில் கடும் மழையினால் 100 குடும்பங்களில் 296 பேர் பாதிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலையால், இரத்தினபுரி மாவட்டத்தில் 10 பிரதேச செயலக பிரிவுகளில், 100 குடும்பங்களைச் சேர்ந்த 296 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தெரிவித்தார்.

கடந்த 12ஆம், 13 ஆம் திகதிகளில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மரங்கள் சரிந்து விழுந்தமையினால் அவர்கள் இவ்வாறு பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் சுமார் 25 வீடுகள் பகுதியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

எஹலியகொடை செயலாளர் பிரிவிலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு அனர்த்தத்தினால் 53 குடும்பங்களைச் சேர்ந்த 151பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேரும் எலபாத பிரிவில் 06 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் குருவிட பிரதேச செயலாளர் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேரும் அனர்த்தத்தினால் பாதிப்படைந்துள்ளதாக இரத்தினபுரி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நிவிதிகல ஓப்பனாயககிரியெல்லவெலிகேபொல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் பல குடும்பங்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும், மாவட்ட செயலாளர் வசந்த குணரத்னவின் பணிப்புரைக்கமைய, இரத்தினபுரி பிரதேச செயலகம் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரி மாவட்ட பட்டதாரி சங்கத்துடனான கலந்துரையாடல்





**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி மாவட்ட பட்டதாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளருமான சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் நேற்று முன்தினம் (17) காவத்தை வெள்ளந்துர சியாரா மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டம் மகளிர் அபிவிருத்தி தொடர்பான தலைவர் சட்டத்தரணி திலுஷா மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனில் செனவி உட்பட அதிபர் ஆசிரியர்கள் பட்டதாரிகள் போன்றோர் கலந்துகொண்டனர்.

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

தனக்கு சொந்தமான வள்ளத்தில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று எம்பிலிப்பிட்டிய ஹுங்கம கலமெட்டிய குடாவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் கடந்த 16 ஆம் திகதி காலை 5.30 மணியளவில், தனது வள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்றதாக அவரது குடும்பத்தினர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலமான எதிர்கட்சியை அமைப்பதைவிட பலமான அரசாங்கத்தை அமைக்க வேண்டும்

## வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

**பொகவந்தலாவ நிருபர்**

இந்த நாட்டில் பலமான எதிர்கட்சியை உருவாக்குவதை விட பலமான அரசாங்கமொன்றை அமைப்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நோக்கமாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிதலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வட்டவளையில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,



நுவரெலியா மாவட்டத்தில், தொடர்சியாக தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக ஐந்து உறுப்பினர்கள் வெற்றி பெற்று வருகிறோம். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்தால் மலையகத்தில் உள்ள ஒட்டுமொத்த பிரதிநிதித்துவமும் குறைவடையும்.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகமான உறுப்பினர்களை தெரிவுசெய்கின்ற பொறுப்பு மக்கள் கைகளில் இருக்கிறது. அதனடிப்படையில். நான் மற்றும் திகாம்பரம், உதயகுமார் ஆகியோரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

மக்களுக்கு சேவைகளை செய்துவிட்டு மக்கள் மத்தியில் வந்து வாக்கு கேட்கிறோம். நுவரெலியா மாவட்டத்தில் எம்முடைய பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் உங்களுடைய வாக்குகள் உறுதுணையாக இருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# நுவரெலியாவில் ஐ.தே.கட்சியில் போட்டியிடும் திருமுருகனின் பிரசார நடவடிக்கை ஆரம்பம்

பாராளுமன்ற தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி வேட்பாளராக, நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடும் சதானந்தன் திருமுருகன் தனது தேர்தல் பிரசார நடவடிக்கையை நேற்று முன்தினம் (17) ஆரம்பித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க கெட்டபுலா குயின்ஸ்பேரி தோட்டத்தில் அமைந்துள்ள நமநாதர் சித்தர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜையில் கலந்துகொண்ட அவர், அங்கு மக்கள் மத்தியில் தன்னை அறிமுகம் செய்துகொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கையை ஆரம்பித்தார்.

இதன்போது உரையாற்றிய சதானந்தன் திருமுருகன்,



நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட நாட்டில் ஏழு மாவட்டங்களில் வாழும் மலையக மக்கள் வாழ்வியல் மாற்றத்துக்கு, கல்வியே சக்தியாக அமையும் எனவும் கல்வி அபிவிருத்திக்கு தான் அயராது உழைக்க தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், கல்வி கற்கும் மலையக பெருந்தோட்ட மாணவர்களின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பட்டதாரியை உருவாக்க இலக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# வரலாற்றைக்கொண்டு வாக்கு கேட்கவில்லை செய்த சேவைக்கே உங்களிடம் வருகின்றேன்

## ஜீவன் தொண்டமான்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தான் வரலாற்றை வைத்துக்கொண்டு மக்களிடம் வாக்கு கேட்டு வரவில்லை எனவும் தான் செய்த சேவையின் நிமித்தமே மக்களிடம் வாக்குகளை கேட்டு வருவதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



தனது பாட்டனாரின் பெயரையோ, தந்தையின் பெயரையோ தான் பயன்படுத்தவில்லை என தெரிவித்த அவர், இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போதுநாட்டில்பொற்காலம்ஒன்றுஇருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த ஜீவன் தொண்டமான், மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நான்கு வருடங்களாக மக்களுக்காகவே பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். மக்களின் பிரச்சினைகளுக்காகவே களத்தில் இறங்கியிருக்கின்றேன். அப்போது, நான் செய்தது அராஜக அரசியல் எனவும் நான் கெட்டவன் எனவும் என்னை சித்தரித்தார்கள். எமது மக்களை அடிமைகளாக வழிநடத்தியவர்களையே நான் களத்தில் இறங்கி கேள்வி கேட்டேன்.

எந்தவொரு இடத்திலும் நான் ஓடி ஒளியவில்லை. நாடு வங்குரோத்து அடைந்தபோதுகூட, மலையகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு சம்பள உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை 30 சுயாதீன கட்சிகள் சுயேட்சையாக களமிறங்கியுள்ளன. எக் கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதிக்கும் வகையிலேயே களமிறக்கப்பட்டுள்ளன.

மலையகத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே, பல்வேறு அரச நியமனங்களை பெற்றுக்கொடுத்துள்ளன. இத்தேர்தலில் மலையக மக்களுடைய வாக்குகளைச் சிலர் சிதறடிக்க முயற்சிக்கின்றனர். குடும்ப அரசியலுக்கு எதிர்ப்பு என கூறியவர்கள் களுத்துறை மாவட்டத்தில் தந்தையும் மகனும் போட்டியிடுகின்றனர்.

எனது குடும்பத்தில் நான் மட்டுமே போட்டியிடுகின்றேன். இது குடும்ப அரசியல் கிடையாது. இ.தொ.கா என்பது ஒரு பொது நிறுவனம். இத் தேர்தலில் எமது மக்கள் நன்கு சிந்தித்து செயற்பட வேண்டும். தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் வாக்குகளை அளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# மனோ கணேசனின் வழிகாட்டலுடன் கண்டி மக்கள் பேராதரவு வழங்குவர்

## ஐ.ம.கூ. வேட்பாளர் பாரத் அருள்சாமி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கண்டி மாவட்டத்துக்கு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அவசியம் என்பதால், எம்மை போன்ற இளைஞர்களையும் மக்கள் பக்கம் நிற்பவர்களையும் பாராளுமன்றம் அனுப்புவதற்கு மக்கள் முடிவுசெய்து விட்டதாக, ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் பாரத் அருள்சாமியின் கண்டி மாவட்ட தேர்தல் காரியாலய திறப்பு விழா, கண்டி நகரில் நேற்று (18) நடைபெற்றதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,



கண்டி மாவட்டத்தில் நீண்டகாலமாகவே தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்தது. அதனை வென்றெடுப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் 2010 ஆம் ஆண்டு விதை விதைத்தார். அந்த விதைமூலம் ஏற்பட்ட விளைச்சலைதான் சிலர் 2015 ஆம் ஆண்டு அறுவடை செய்தனர்.

எனினும், கண்டி மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஊடாக மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் நடைபெறவில்லை.

எனவே, மனோ கணேசனின் வழிகாட்டலுடன் கண்டியில் களமிறங்கியுள்ள தனக்கு தமிழ் மக்கள் பேராதரவு வழங்குவார்கள். முஸ்லிம் சொந்தங்களும் சமூக நன்மைக்காக அவர்களின் வாக்கை பயன்படுத்துவார்கள்.

அதன்படி, கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இம்முறை நிச்சயம் பாதுகாக்கப்படும். ஆனால், புதிய இளைஞனை, மக்களுக்கு சேவை செய்யக்கூடிய என்னை மக்கள் அதிஉயர் சபைக்கு, அமோக ஆதரவுடன் அனுப்பி வைப்பார்கள் என அவர் தெரிவித்தார்.

## சிறைச்சாலை சுவரிலிருந்து கையடக்கத்தொலைபேசிகள், சிம் கார்ட் மீட்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

எம்பிலிப்பிடிய அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் சுவர் ஒன்றிலிருந்து மூன்று கையடக்கத் தொலைபேசிகள், ஒரு சிம் கார்ட் போன்றவற்றை சிறைச்சாலை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் நேற்று (18) மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இவை மீட்கப்பட்டுள்ளன. இக் கைத்தொலைபேசிகள் மற்றும் சிம்கார்ட் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மஸ்கெலியா, சாமிமலை பகுதியில் சிறுத்தை சடலமாக மீட்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா, சாமிமலை பகுதியிலுள்ள ஸ்டொக்கம் தோட்ட ஸ்காபிரோ பிரிவில், உயிரிழந்த நிலையில் சிறுத்தையொன்று மீட்கப்பட்டுள்ளது.

அதி உயர் மின் மாற்றி பகுதியில், நேற்று காலை (18) சிறுத்தையொன்று உயிரிழந்து கிடப்பதை அவதானித்த தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து தோட்ட நிர்வாகம், மஸ்கெலியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, நல்லதண்ணி வனத்துறை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



சம்பவ இடத்துக்கு விரைந்த வன பாதுகாப்பு அதிகாரிகள், சிறுத்தையை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பேராதெனிய மிருக வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு மஹரிஷிகளின் 91ஆவது ஜனன தின குரு ஜயந்தி விழா

காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு மஹரிஷிகளின் 91ஆவது ஜனன தின குரு ஜயந்தி விழா பக்திபூர்வமாகவும் வெகுவிமர்சையாகவும் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தின் காயத்ரீ பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது. அன்று ஆலயத்தில் விஷேட அபிஷேகமும் பூஜைகளையும் நடைபெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து குரு திருவுருவச் சிலை ஊர்வலம் இடம்பெறும். இதனையடுத்து குருபூஜை, காயத்ரி பூஜை, மகாமிருத்யுஞ்ஜெய யாகம், அருளுபதேசம், பிரார்த்தனை, தியானம், மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். அன்று பிற்பகல் 2 மணிக்கு நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இங்கு இடம்பெறும். இதனை காயத்ரிபீட பக்தர்கள் சார்பாகவும் அறங்காவலர் குழு சார்பாகவும் ஸ்ரீ சக்திவேல் தெரிவித்தார். இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொண்டு



இறையருளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை: மக்கள் கவலை

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்ட வைத்தியசாலையாக இருந்த இவ் வைத்தியசாலை, வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் எனப் பலரும் இடமாற்றப்பட்டமையால் கிராமிய வைத்தியசாலையாக தரமிறக்கப்பட்டது.

தற்போது அது மாகாண மட்டத்துக்கு கொண்டுவரப்பட்டதால் மத்திய அரசு மூலம் கிடைக்கும் அனைத்து வளங்களும் கிடைக்காமல் போய் விட்டது. இந்த வைத்தியசாலையில் பாரத் தூக்கி இரண்டில் ஒன்று மட்டுமே பாவனையில் உள்ளது. ஒன்று பழுதான நிலையில் கடந்த 25 ஆண்டுகளாக பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்படுகின்றனர். இதன் காரணமாக மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தோட்ட கர்ப்பிணிப் பெண்கள் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். கர்ப்பம் தரித்த நாள் முதல் குழந்தை பெறும் வரையில் சொல்லொணா துயரங்களை பெண்கள் அனுபவிக்கின்றனர்.

அங்கு ஸ்கேன் இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் கர்ப்பிணிகள் தனியார் வைத்தியசாலைக்கு செல்ல நேரிடுவதாகவும் மக்கள் முறையிடுகின்றனர். குறிப்பாக சிவனொளி பாதமலை யாத்திரை காலத்தில் வாராந்தம் பல இலட்சம் யாத்திரிகர்கள் வந்து செல்வதால் இவ் வைத்தியசாலை நிரந்தரமாக தரம் உயர்த்த வேண்டியது காலத்தின் தேவை. இவ்வைத்தியசாலை கொவிட் தொற்றுக் காலத்தில் மூடப்பட்டு 300க்கும் மேற்பட்ட கட்டில்கள் இடப்பட்டு கொவிட் வைத்தியசாலையாக மாற்றப்பட்டது. தற்போது, மீண்டும் இவ் வைத்தியசாலை இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் குறைந்த அளவிலான வைத்தியர்கள் மற்றும் தாதியர்களே சேவையில் உள்ளனர்.

# புதிய சுவைகளுடன் சொக்லேட்களை மீள அறிமுகப்படுத்துகின்ற Zellers

இலங்கையில் முதல்முதலாக உள்நாட்டு சொக்லேட் உற்பத்தியாளராக, மலிபன் நிறுவனத்தின் தீர்க்கதரிசனம் மிக்க ஸ்தாபகத் தலைவரான ஏ.ஜி. ஹினிஅப்புகாமியினால்1964 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட *Zellers*, இலங்கை மக்களின் நெஞ்சங்களில் விசேட ஸ்தானத்தைக் கொண்டுள்ளது. உயர்ரக கொக்கோவின் பயன்பாடு மற்றும் 'beantobar' கோட்பாட்டின் மீதான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்குப் பெயர் பெற்று விளங்கும் *Zellers*, சுவையில் செழுமை நிறைந்தது மாத்திரமன்றி, பாரம்பரியச் சிறப்பும் மிக்க சொக்லேட்டுக்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதே பாரம்பரியத்தின் கீழ் புதிய வடிவங்களை மீண்டும் அறிமுகப்படுத்துவதே இந்த வர்த்தகநாமத்தின் நோக்கமாகும்.

*Zellers* புது வடிவம் அளிக்கப்பட்ட உயர் ரக சொக்லேட் வகைகளை *Zellers* அறிமுகப்படுத்துகின்றது. இப்புதிய வகையானது பாரம்பரியமான சுவைத் தெரிவுகளை, முற்றிலும் புதிய புத்தாக்கங்களுடன் இணைந்து நாவிற்கு சுவையூட்டும் புதிய சுவை வடிவங்களாக கிடைக்கச் செய்வதற்கு உத்தரவாதமளிக்கின்றது. கானாவிலிருந்து பெறப்படுகின்ற மிகச் சிறந்த கொக்கோவைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற *Zellers*, அதியுயர் தரத்திற்கு உத்தரவாதமளித்து, ஒவ்வொரு சொக்லேட் வகையும் ஆடம்பர மற்றும் மகிழ்விக்கும் அனுபவத்தை வழங்குவது உறுதி செய்யப்படுகின்றது. பிரதான வகைகளில் *Milk Chocolate, Cashewnut Chocolate, Fruit & Nut Chocolate* மற்றும் சதாகாலமும் பிரபலமான *Crispies* ஆகியன அடங்கியுள்ளன. வாயில் மெல்லும் ஒவ்வொரு தடவையும் செழுமையான கானா கொக்கோ மற்றும் கிறீம் தன்மையுடனான பால் ஆகியவற்றின் நேர்த்தியான சமநிலையுடன், மென்மையான, மிருதுவான மற்றும் ஒருபோதும் தவற விடக்கூடாத சுவையை சொக்லேட் பிரியர்களுக்கு வழங்குகின்றது.

நலச்செழுமை மிக்க சொக்லேட்டுக்களை புதிய மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் *Zellers*, இலங்கைச் சந்தையில் முதல்முறையாக வியப்பூட்டும் பல புதுமையான தயாரிப்புக்களையும் அறிமுகப்படுத்துகின்றது.

உயர்ரக பால் சொக்லேட் மற்றும் ஆற்றலை ஒன்றிணைத்து வழங்கும் *sugar coated choco buttons* மற்றும் ஒரு போது தவற விடக்கூடாத செழுமையின் மென்மை மற்றும் ஆர்வமூட்டும் வகையில் மெல்வதை இணைக்கும் வர்ணமயமான *sugar coated choco buttons* ஆகியவற்றையும் மிகவும்




ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற *Zellers* சொக்லேட் கொண்டுள்ளது. இளம் நுகர்வோரை வசீகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தனித்துவமான சேர்க்கையானது *Zellers* தயாரிப்பு வரிசையில் விநோதம் மற்றும் உற்சாகத்தை ஏற்படுத்தவுள்ளதுடன், உள்நாட்டு சொக்லேட் சந்தையில் தனித்துவமான ஒன்றாகத் திகழவுள்ளது.

# பெரும் போக விவசாயிகளுக்காக முன்னெடுக்கப்பட்ட 'DIMO Care Camp'





பெரும் போகத்திற்குத் தயாராகி வரும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் *DIMO* நிறுவனம் இலவசமாக இரண்டாவது தடவையாக முன்னெடுத்திருந்த *'DIMO Care Camp'* உழவு இயந்திர சேவை முகாம் அண்மையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றதோடு, இதில் பெருமளவான உழவு இயந்திர உரிமையாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

விவசாய நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் தரத்தை பேணுவதற்கு, விவசாய இயந்திரங்களின் முறையான பராமரிப்பு மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் இந்நாட்டின் விவசாயிகளுக்கு தமது பங்களிப்பை வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்த இலவச சேவையில், எந்தவொரு வர்த்தகநாமத்தைச் சேர்ந்த அல்லது எந்தவொரு வகையான உழவு இயந்திரங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்.

இவ்வருடம் நாட்டிலுள்ள முக்கிய விவசாய மாவட்டங்களை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்தொடர் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைவாக மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, அநுராதபுரம், குருணாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களில் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த முகாம்களில் பங்கேற்ற விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் இலவசமாக ஆய்வு செய்யப்பட்டதோடு, பழுது பார்த்தல், உழவு இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்களுக்கு விசேட தள்ளுபடி போன்ற பல சலுகைகளை *DIMO* வழங்கியது. அத்துடன், உழவு இயந்திரங்களுக்கான டயர்கள் மற்றும் *DIMO Lumin* மின் விளக்குகளுக்கு விசேட சலுகைகளும் வழங்கப்பட்டன.

அது மாத்திரமன்றி, இந்த சேவை முகாமின் மூலம் விவசாயிகளுக்கு இலவச மருத்துவ முகாம் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களது இரத்த அழுத்தம், வயது மற்றும் உயரத்திற்கேற்ற நிறை *(BMI)* தொடர்பான பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு சுகாதார சேவைகள் முன்னெடுக்கப்பட்டு, பெரும் போகத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அவசியமான சிறந்த ஆரோக்கியம் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, விவசாயத்தை வெற்றிகரகமாக முன்னெடுப்பதற்கான தயார்படுத்தல் பணிகள் இங்கு இடம்பெற்றன.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# இலங்கையின் முதலாவது மும்மொழி மாதவிடாய் தடங்காணல் App ஆன 'Fio' Fems இனால் அறிமுகம்

இலங்கையின் முன்னணி பெண்கள் சுகாதார தூய்மை வர்த்தக நாமமான *Fems*, நாட்டின் முதலாவது மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட மாதவிடாய் தடங்காணல் *app* ஆன 'Fio' செயலிய அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. பெண்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் மாதவிடாய் சுகாதார அறிவூட்டல், மாதவிடாய் சக்கர தடங்காணல் மற்றும் பிரத்தியேகமான மாதவிடாய் சுகாதாரத்துக்கான பாதுகாப்பான தள உருவாக்கம் போன்றவற்றை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த *app* விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




பெண்களுக்கு சுயாதீனமாகவும், மாதவிடாய் தொடர்பில் காணப்படும் சமூக கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டவர்களாகவும் திகழ்வதற்கும், நாடு முழுவதையும் சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஆதரவளிப்பதும் எனும் நோக்கத்துக்கமைய, இந்த புரட்சிகரமான *app* செயலாற்றுகின்றது. 100% இலவசமாக பயன்படுத்தக்கூடிய வகையில் *Fio* வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பாவனையாளர்களுக்கு தமது மாதவிடாய் சக்கரத்தை தடங்காண்பது, நம்பத்தகுந்த மாதவிடாய் பற்றிய தகவல்களைப் பெறுவது மற்றும் மருத்துவ நிபுணர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவது போன்ற வசதிகளை வழங்குகின்றது. தடைகளை தகர்த்து, இந்த *app* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காணப்படுவதுடன், இலங்கையில் சகல பெண்களுக்கும் உள்ளடக்கம் மற்றும் அணுகல் திறன் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

*Fems WhatsApp chatbot* ஊடாக கிடைத்திருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் *Fio* வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த *WhatsApp chatbot* ஊடாக 17,000 தன்னியக்க தகவல்கள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆகஸ்ட் மாதம் அறிமுகம் செய்து 40 நாட்களினுள் 4000 நபர்களின் *chat*களுக்கு பதிலளித்துள்ளது. மாதவிடாய் சுகாதாரம் தொடர்பில் அறிவு மற்றும் விழிப்புணர்வு போன்றவற்றில் பெருமளவு இடைவெளி காணப்படுகின்றமை இதனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், பிரத்தியேகமான மாதவிடாய் சுகாதார ஆதரவுக்கான உறுதியான தேவையையும் சுட்டிக்காட்டியிருந்தது.

அறிமுகம் செய்யப்பட்ட *Fio app* இல் பாவனையாளர்களுக்கு இலகுவாக தமது மாதவிடாய் திகதிகளை பதிவு செய்யும் வசதி வழங்கப்படுவதுடன், அதனூடாக அவர்களின் சக்கரம் மற்றும் கருமுட்டை வெளிப்பாடு தொடர்பான துல்லியமான எதிர்வுகூரல்களை பெற்றுக் கொள்ளவும் முடியும். மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து உருவாக்கப்பட்ட *Fio* இனால், எதிர்வுகூரல்கள் உறுதி செய்யப்படுவதுடன், *insights* பிரிவில் காணப்படும் அறிவூட்டும் அம்சங்கள் மருத்துவ ரீதியில் உறுதியானவையாகவும், பெறுமதி வாய்ந்த தாங்கிக் கொள்ளும் மூலோபாயங்களை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது.

# சிறந்த விலையில் பொருள் கொள்வனவிற்கு Choice by AliExpress ஐ அறிமுகப்படுத்தும் Daraz

நாட்டில் முன்னணி ஒன்லைன் (இணைய வழி) சந்தைப்படுத்தல் தளமாக விளங்கும் *Daraz Sri Lanka*, தனது தளத்தில் புதிய *Choice* தெரிவொன்றை அறிமுகப்படுத்துவதற்காக *AliExpress Choice* உடன் ஒத்துழைத்துச் செயற்படவுள்ளது. இதன் மூலமாக கொள்வனவாளர்கள் தற்போது நவநாகரிகம் (கைக்கடிகாரங்கள், சூரிய ஒளிப் பாதுகாப்பு கண்ணாடிகள், ஆபரணங்கள், பேக் போன்றவை), ஆரோக்கியம் மற்றும் அழகு சார்ந்த பிரபலமான வகைகளில் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட உச்ச தரத்திலான தயாரிப்புக்களை தெரிவு செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.



வாடிக்கையாளர்கள் மத்தியில் பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட *AliExpress Choice* ஆனது சிறந்த கொள்வனவு அனுபவத்திற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட, மகத்தான பெறுமதி கொண்ட தயாரிப்புக்கள் மற்றும் மேம்பட்ட சேவைகளை வழங்குகின்றது. *Choice* ஆனது தற்போது 50 க்கும் மேற்பட்ட சந்தைகளில் பயனர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது.

இவ்வாறே இலங்கையிலும் *Daraz* இன் புதிய *Choice* வழிமுறையானது பணத்திற்கான சிறந்த மதிப்பு, இலவச விநியோகம் மற்றும் 14 தினங்களுக்குள் அறவீடு இன்றி அவற்றை மீளத் திருப்புதல் ஆகியவற்றுடன் *AliExpress Choice* இல் கிடைக்கும் தெரிவுகள் அடங்கலாக, பல்வகைப்பட்ட தயாரிப்புக்களை வழங்குகின்றது. மிகவும் கூடுதலாக நாடப்படுகின்ற தயாரிப்புக்களை சிக்கனமான விலைகளுடன் வழங்கி, *Daraz* பயனர்களுக்கு மேம்பட்ட கொள்வனவு அனுபவத்திற்கு இக்கூட்டாண்மை உத்தரவாதமளிக்கின்றது.

*AliExpress Choice* வழங்கும் தற்போதைய தயாரிப்பு வகைகளுக்குப் புறம்பாக, உள்நாட்டு நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இன்னும் கூடுதலான அளவில் அன்றாட அத்தியாவசியப் பொருட்களை உள்வாங்கி தனது *Choice* வகையை *Daraz* விரிவுபடுத்தியுள்ளது.

# மீள் நிரப்பல் தொகுதிகளை அதிகரிக்கும் யூனிலீவர்



யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனமானது, Vega Innovations மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) ஆகியவற்றுடன் இணைந்து, மீள் நிரப்பக்கூடிய தொகுதிகளின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. Vega Innovations இன் UFill திட்டத்தின் ஒரு அங்கமான இந்த நிலையங்கள், சலவைத் திரவங்கள் மற்றும் ஷம்புக்கள் போன்ற யூனிலீவர் தயாரிப்புகளை மீள் நிரப்புவதற்கான செலவு குறைந்த வழிகளை நுகர்வோருக்கு வழங்கும் அதே நேரத்தில், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொதியிடலில் தங்கியிருப்பதை குறைக்கிறது.

UFill திட்டமானது, 2027 ஆம் ஆண்டளவில், 128 மெட்ரிக் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கையின் குப்பைக் கிடங்குகளில் சேர்வதைத் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பொதிகளை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக மீள் நிரப்புவதன் மூலம் 2030% வரையான குறைந்த செலவில் நுகர்வோர் பயனடைவார்கள். USAID இன் சமுத்திர பிளாஸ்டிக் குறைப்பு நடவடிக்கையானது, மூலோபாய ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவி மூலம் இந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்.

Vega Innovations தலைமையகத்தில் இடம்பெற்ற, இந்த கூட்டாண்மையை நடைமுறைப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வானது, இலங்கை முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகளை குறைக்கும் முயற்சிகளில் முக்கிய மைல்கல்லாகும். இது யூனிலீவர் மற்றும் Vega Innovations ஆகியவற்றின் தற்போதைய வலையமைப்பான கொழும்பு கோட்டை புகையிரத நிலையம், சேவா வனிதா பட்ஜட் மையம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற தற்போதுள்ள மீள்நிரப்பு நிலையங்களின் வலையமைப்பை வலுப்படுத்துவதோடு, நாடு முழுவதும் அதனை விரிவாக்குவதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

# தனது புதிய கிளையை மத்துகமவில் திறக்கும் சியபத பினான்ஸ் பிஎல்சி

நாடு முழுவதிற்குமான தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக சியபத பினான்ஸ் பிஎல்சி தனது 51ஆவது கிளையை மத்துகமவில் அண்மையில் திறந்து வைத்துள்ளது. களுத்துறை மாவட்டத்திற்குள் உள்ள முதன்மை நகரங்களில் ஒன்றான மத்துகமவில் திறக்கப்பட்டுள்ள இந்த புதிய கிளையானது சியபத வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதித் தீர்வுகளை வழங்குகிறது.



அரசு மற்றும் தனியார் துறையின் ஈடுபாட்டை ஒருங்கிணைக்கும் கலப்புப் பொருளாதாரத்தைக் கொண்ட மத்துகம, அதன் வர்த்தக சமூகத்தின் வளர்ச்சிக்கான அதிக ஆற்றலைக் கொண்டுள்ளது. இறப்பர், நெல், தென்னை மற்றும் தேயிலை போன்ற பெருந்தோட்டத் துறைகள் மூலம் மக்கள் தமது பொருளாதாரத்தை சார்ந்துள்ளனர். மேலும் இப்பகுதி மக்கள், சேவைகள் மற்றும் விவசாயத் தொழில்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பிரபலத்தையும் காட்டுகின்றனர்.

மத்துகமவின் செழிப்பான பொருளாதாரத்திற்கு மேலும் வலுச் சேர்ப்பது சுற்றுலாத்துறை ஆகும். இங்கு பழங்கால மத வழிபாட்டுத் தலங்களான பஹியங்கல (ஃபா ஹியன் குகை), பக்குல மகா சேயா, சிங்க ராஜா மழைக்காடுகளின் மயக்கும் அழகு மற்றும் பல இயற்கை நீர் வீழ்ச்சிகள் என்பன சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அம்சங்களாக அமைந்துள்ளதோடு, விருந்தோம்பல் துறையில் ஒரு நம்பிக்கைக்குரிய எதிர்காலத்திற்கும் வழியமைத்துள்ளது.

சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் அரசு, தனியார் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் கிளை திறந்து வைக்கப்பட்டது.

# கொமர்ஷல் வங்கியின் அதிஉயர் நிதியுதவியுடன் நிதியிருப்பினை பலப்படுத்தும் பிஎம்எப் பைனான்ஸ்



பிஎம்எப் பைனான்ஸ் பிஎல்சி ஆனது இலங்கையின் மிகப்பெரிய தனியார் வணிக வங்கியான கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பிஎல்சியிடமிருந்து ஒரு பில்லியன் ரூபாயில் 500 மில்லியன் ரூபாவான கணிசமான மூலதன உதவியைப் பெற்று தனது நிதி நிலையை பலப்படுத்திக் கொண்டதோடு, இந் நிதியானது நிதிச் சேவைத் துறையில் பிஎம்எப் பைனான்ஸ் பிஎல்சி இன் ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கு வலுவான அங்கீகாரமாகவும், மேம்பட்ட வளர்ச்சி மற்றும் செயல்பாட்டுத் திறனுக்கு வழி வகுப்பதாகவும் அமைகிறது. இம் மூலதனமானது அடிப்படையில் பிஎம்எப் பைனான்ஸ் இன் துறைகளில் ஒன்றான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எஸ்எம்இ) வளர்ச்சியை ஆதரிக்கும் துறைகளில் ஈடுபடுத்தப்படும்.

இந்த முதலீடுகள் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எஸ்எம்இ) வளர்ச்சியில் பங்களிப்பு செய்து, உள்ளூர் வணிகங்களின் நீண்டகால வளர்ச்சிக்கும், தொழில் முனைவு மற்றும் நிலையான பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழி வகுப்பதை பிஎம்எப் பைனான்ஸ்; பிஎல்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் முன்னணி தனியார் துறை வர்த்தக வங்கியான கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பிஎ்சி, அதன் நிதி வலிமை, ஸ்திரத்தன்மை மற்றும் பரந்த அளவிலான வங்கித் தீர்வுகளுக்குப் புகழ் பெற்ற வங்கியாகும். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தனது சேவைகளை வழங்கி வரும் இவ் வங்கியானது தொடர்ந்தும் வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஒரு நம்பகமான பங்காளியாக இருந்து வருகிறது.

# ஹேமாஸ் மருத்துவமனை ஆரம்பித்துள்ள 'BreastOber 2024' மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக்கான அர்ப்பணிப்பு

இந்த ஒக்டோபரில் மீண்டும் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் அனுட்டிக்கப்படுகின்ற நிலையில், ஹேமாஸ் மருத்துவமனை, *'BreastOber 2024'* இனை ஆரம்பித்து தனது அர்ப்பணிப்பைக் காண்பிக்க முன்வந்துள்ளது. ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொள்வதன் முக்கியத்துவம் குறித்து பெண்களுக்கு அறிவூட்டி, உயிர் காக்கும் சிகிச்சை வழிமுறைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதே இந்த வருடாந்த முயற்சியின் நோக்கம்.


சர்வதேசரீதியில் பெண்கள் மத்தியில் மிகவும் பொதுவான ஒன்றாக மார்பக புற்றுநோய் காணப்படுகின்ற நிலையில், இது குறித்த விழிப்புணர்வு மற்றும் உரிய நடவடிக்கை முன்னரை விடவும் மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

சர்வதேசரீதியில் பெண்கள் மத்தியில் மிகவும் பொதுவான ஒன்றாக மார்பக புற்றுநோய் காணப்படுகின்ற நிலையில், இதனால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அச்சமூட்டும் வகையில் காணப்படுகின்றது. சர்வதேச அளவில் சுமார் 2.3 மில்லியன் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் உள்ளதாக புதிதாக கண்டறியப்பட்டுள்ளதுடன், இவ்வியாதி சுமார் 670,000 உயிர்களைக் காவுகொண்டுள்ளது (மூலம்: உலக சுகாதார ஸ்தாபனம்). இவ்வாறு சவால்மிக்க புள்ளி விபரங்களுக்கு மத்தியிலும், நம்பிக்கை இன்னமும் தளர்ந்து விடவில்லை. ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொள்வது உயிர் பிழைக்கும் வீதத்தை கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்வதுடன், திறன்மிக்க சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கின்றது.

*'BreastOber 2024'* பிரச்சாரத்தின் மூலமாக மேற்குறிப்பிட்ட முக்கியமான செய்தியை வலியுறுத்துவதே ஹேமாஸ் மருத்துவமனையின் நோக்கமாக உள்ளதுடன், இவ்வியாதியை குணப்படுத்தக்கூடிய கட்டத்தில் கண்டறிந்து கொள்வதற்கு முற்கூட்டிய சோதனைகள் மிகவும் முக்கியம் என்பதையும் வலியுறுத்துகின்றது.




2024 ஆம் ஆண்டில், பாரம்பரியமான *mammogram* சோதனை நடைமுறைகள் குறித்த அசௌகரியம் மற்றும் அச்சம் ஆகியவற்றைப் போக்கி, அதிநவீன மற்றும் வலிகள் அற்ற *mammogram* சோதனை தொழில்நுட்பத்தினூடாக ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொள்வதற்கான முற்கூட்டிய படிமுறைகளை முன்னெடுக்கும் வாய்ப்பினை இலங்கையிலுள்ள பெண்களுக்கு ஹேமாஸ் மருத்துவமனை வழங்குகின்றது.



# சர்வதேச செய்திகள்

# ஹமாஸ் தலைவர் சின்வாரின் மரணத்தின் பின்னரும் போரைத் தொடர இஸ்ரேல் உறுதி

## தாக்குதலைத் தீவிரப்படுத்துகிறது ஹிஸ்புல்லா: அமெரிக்கா போர் நிறுத்த முயற்சி



காசாவின் தெற்கு நகரான ரபாவில் இராணுவ நடவடிக்கை ஒன்றின் போது ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் யஹ்யா சின்வார் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அரசு மற்றும் இராணுவம் கடந்த வியாழக் கிழமை உறுதி செய்துள்ளது.

இஸ்ரேலின் இந்த அறிவிப்புத் தொடர்பில் ஹமாஸ் அமைப்பு உடனடியாக எதனையும் கூறா போதிலும் நேற்று அதனை உறுப்படுத்தியுள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்துவதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்திருப்பதோடு 'எதிர்ப்புப் போராட்ட உணர்வு வலுப்பெறும்' என்று ஈரான் தெரிவித்துள்ளது.

காசாவில் போரைத் தூண்டிய கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இடம்பெற்ற இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் என பரவலாக நம்பப்படும் சின்வார் கடந்த புதனன்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டதாகவும், அவரது மரணம் டி.என்.ஏ. சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும் இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இதில் சம்பவ இடத்தில் பிடிக்கப்பட்டதாக இஸ்ரேல் வெளியிட்ட படம் ஒன்றில், சின்வார் போர் உடைய அணிந்து கட்டட இடிபாடுகளுக்கு இடையே இருக்கை ஒன்றில் இறந்த நிலையில் இருப்பது பதிவாகியுள்ளது. அந்தக் கட்டடம் செல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது.

சின்வாரின் மரணம் போரை முடிவுக்குக் கொண்டுவர வாய்ப்பை ஏற்படுத்தி இருப்பதாக மேற்குலக தலைவர்கள் நம்பிக்கை வெளியிட்ட போதும், ஹமாஸ் பிடியில் இருக்கும் பணயக்கைதிகள் திரும்பும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

'இன்று நாம் இலக்கை எட்டிவிட்டோம். தீய சக்தி முறியடிக்கப்பட்ட போதும் எமது இலக்கு இன்னும் பூர்த்தியாகவில்லை' என்று சின்வாரின் மரணத்தை உறுதி செய்து பதிவு செய்யப்பட்ட வீடியோ அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட நெதன்யாகு குறிப்பிட்டார்.

ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே கடந்த ஜூலையில் தெஹ்ரானில் வைத்து படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே ஹமாஸின் ஒட்டுமொத்தத் தலைவராக சின்வார் நியமிக்கப்பட்டார். அவர் காசாவில் ஹமாஸ் அமைப்பு கடந்த இரண்டு தசாப்தங்களில் அமைத்திருக்கும் சுரங்கக் கட்டமைப்பில் மறைந்திருப்பதாக நம்பப்பட்டது.

இந்நிலையில் தெற்கு காசாவில் இஸ்ரேலியத் துருப்புகள் வழக்கமான படை நடவடிக்கையின்போது, தாம் இலக்கு வைப்பது சின்வார் என்று தெரியாத நிலையிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஹமாஸ் இது தொடர்பில் உடன் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடாதபோதும், இஸ்ரேலிய துருப்புகளால் சின்வார் கொல்லப்பட்டிக்கலாம் என்று ஹமாஸ் வட்டாரங்கள் கூறியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**யஹ்யா சின்வார்**

காசாவின் கான் யூனிஸில் உள்ள அகதி முகாமில் 1962 ஆம் ஆண்டு பிறந்த சின்வாருக்கு ஐந்து வயது இருக்கும்போதே 1967 மத்திய கிழக்குப் போரில் காசா பகுதியை எகிப்திடம் இருந்து இஸ்ரேல் கைப்பற்றியது.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்ட 700,000க்கும் அதிகமான பலஸ்தீனர்களில் சின்வாரின் குடும்பத்தினர் உள்ளனர். அவரது குடும்பம் காசாவின் வடக்கு எல்லைக்கு அருகில் இருக்கும் தற்போது அஷ்கெலோன் என்று அறியப்படும் நகரில் இருந்து அகதிகளாக்கப்பட்டவர்களாவர்.

தனது 20 வயதுகளில் இஸ்ரேலுக்கு உளவு பார்த்த நான்கு பலஸ்தீனர்களை கொன்றதாக குற்றங்காணப்பட்டார். 22 ஆண்டுகள் சிறை அனுபவித்த அவர் அங்கு ஹிப்ரு மொழியை கற்றதோடு எதிரிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்ற உபாயங்களையும் தெரிந்துகொண்டார். அவர் சிறையிலிருந்த காலத்தில் அவரது மருத்துவ பதிவுகள் மற்றும் டி.என்.ஏ. மாதிரிகளை இஸ்ரேலால் பெற முடிந்தது. இது அவரை அடையாளம் காண இஸ்ரேலுக்கு உதவியுள்ளது.

2011இல் ஒரே ஒரு இஸ்ரேலிய வீரரான கிளாட் ஷலிட்டை விடுவிப்பதற்கு பகரமாக 1,000க்கும் அதிகமான பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்ட போது சின்வார் இஸ்ரேல் சிறையில் இருந்து விடுதலை பெற்றார்.

கடந்த புதன்கிழமை ரபாவில் நடத்திய தாக்குதலில் மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில் கொல்லப்பட்டவர்கள் மீது டி.என்.ஏ. சோதனை மேற்கொண்டபோதே சின்வார் அடையாளம் காணப்பட்டிருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



**தொடரும் தாக்குதல்கள்**

சின்வாரின் மரணத்தை அடுத்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் அழைத்து வாழ்த்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சின்வாரின் மரணம் காசா போரை முடிவுக்குக் கொண்டுவரவும், பணயக்கைதிகளை மீட்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகளை விடுவிக்கும் முன்மொழிவுகளை ஆரம்பிக்க அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் பிரதான இடையூறாக சின்வார் இருந்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

காசாவில் தொடர்ந்து 101 பணயக்கைதிகள் எஞ்சி இருப்பதாக நம்பப்படும் நிலையில் அவர்களின் உறவினர்கள் கடந்த வியாழக் கிழமை இரவும் டெல் அவிவில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்பாடு ஒன்றுக்கு வருவதற்கு இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுத்து கடந்த ஓர் ஆண்டாக இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் கடந்த இரு வாரங்களாக வடக்கு காசாவை முற்றுகை செய்திருக்கும் இஸ்ரேலிய இராணுவம் கடந்த வியாழன் இரவு தொடக்கம் நடத்திய கடுமையான தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா நகரின் வடமேற்கே அல் நாசிர் வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலை அடுத்து சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டதாக பலஸ்தீன செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பிறிதொரு சம்பவத்தில் காசாவின் தென்மேற்கே இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இரு பலஸ்தீன பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. மத்திய காசாவின் மகாசி அகதி முகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 10 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,500ஐ நெருங்கி இருப்பதோடு காயமடைந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை நெருங்கி இருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

**ஈரான், ஹிஸ்புல்லா அறிவிப்பு**

ஐக்கிய நாடுகளுக்கான ஈரான் தூதரகம் சின்வாரை 'உயிர் தியாகி' என்று குறிப்பிட்டுள்ளது. 'போர் உடையில், திறந்த வெளியில், மறைவிடத்தில் அன்றி, எதிரியை எதிர்கொண்டு, போர்க்களத்தில் நிற்கும் தியாகி சின்வாரை முஸ்லிம்கள் பார்க்கும் போது எதிர்ப்புப் போராட்ட உணர்வு வலுப்பெறும்' என்று தூதரகம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பும், 'இஸ்ரேலுடன் புதிய மற்றும் தீவிர மோதல்' ஒன்றுக்கு மாறுவதாக அறிவித்துள்ளது.

லெபனானிலும் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருவதோடு தெற்கு லெபனானில் இஸ்ரேலிய தரைப்படை ஹிஸ்புல்லா போராளிகளுடன் சண்டையிட்டு வருகிறது. இந்த மோதல்களில் ஐந்து இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் இராணுவ அதிகாரி ஒருவரும் உள்ளார்.

மறுபுறம் லெபனானுக்குள் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்களில் சுமார் 55 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. இதில் மேலும் 500 இஸ்ரேலிய படையினர் காயமடைந்தும் 20 மெர்காவா டாங்கிகள், நான்கு புல்டோசர்கள் அழிக்கப்பட்டும் இருப்பதாக ஹிஸ்புல்லா கூறியது.

மறுபுறம் தெற்கு லெபனானின் தைபி பகுதியில் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஹிஸ்புல்லா தளபாதிகளில் ஒருவரான முஹமது ஹுஸைன் ரமால் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. லெபனானின் பல பகுதிகளிலும் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

# வாடகைத் தாய் முறைக்கு இத்தாலி முழுமையான தடை




வெளிநாடுகளுக்குச் சென்று வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்வதற்கும் இத்தாலி தடை விதித்துள்ளது.

வாடகைத் தாய் முறைக்கு கடந்த 2004ஆம் ஆண்டு முதல் இத்தாலி தடை விதித்துள்ள போதிலும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு வாடகைத் தாய் மூலம் இத்தாலி நாட்டவர்கள் குழந்தைகளைப் பெற்றுவந்தனர். இந்நிலையில் வாடகைத் தாய் முறையை வெளிநாடு சென்று பயன்படுத்துவதற்கும் இத்தாலி அரசு தற்போது தடை விதித்திருக்கிறது.

இது தொடர்பில் இத்தாலி பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் வாடகைத் தாய் முறைக்கு முழு தடைக்கு ஆதரவாக 84 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து, வெளிநாடுகளில் வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறுவதையும் குற்றமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கு கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தலைமையிலான அரசு இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

---

# பிரிக்ஸ் நாடுகளின் மாநாடு ரஷ்யாவில்

பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் 16வது உச்சி மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.




ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் அழைப்புக்கு அமைய பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்குபற்ற உள்ளனர். அதேநேரம் இந்த அமைப்பில் அங்கத்துவம் பெற உலகின் பல நாடுகளும் விண்ணப்பித்தும் இருக்கின்றன. எனினும் இந்த உச்சி மாநாட்டில் உலகளாவிய சமூகத்தைப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.

அதேநேரம் இந்த அமைப்பு நாடுகளின் 15 வது உச்சி மாநாடு கடந்த வருடம் தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் நகரில் நடைபெற்றமை தெரிந்ததே.

---

# இந்து சமுத்திர நாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைக்கு ஆர்வம்



இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உஷ்பெகிஸ்தானும் துர்க்மெனிஸ்தானும் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.

சர்வதேச வடக்கு தெற்கு போக்குவரத்து வழித்தட அமைப்பில் இணையவும் ஈரானின் சஹ்பார் துறைமுகத்தின் ஊடாக இந்து சமுத்திர நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இரண்டு நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

இவ்வழித்தடமானது கடல், ரயில் மற்றும் நெடுஞ்சாலை வழித்தடங்களை உள்ளடக்கிய பல்வகைப்பட்ட வலையமைப்பாகும். இது ஐரோப்பா, ரஷ்யா, மத்திய ஆசியா, வளைகுடா பகுதி மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளை விரைவாக இணைக்கக் கூடியதாக உள்ளதெனக் குறிப்பிட்டுள்ள மத்திய ஆசியக் குடியரவு அதிகாரிகள், ஏனைய வழித்தடங்களை விடவும் மத்திய ஆசிய நாடுகளுக்கு இது செலவு குறைந்த வழித்தடமாக விளங்குவதாகவும் கூறியுள்ளனர். அத்தோடு மூலோபாய மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை மத்திய ஆசிய நாடுகளுக்கு வழங்கக்கூடியதாக விளங்கும் இவ் வழித்தடம் பிராந்தியத்தை உலகின் பிற பகுதிகளுடன் இணைக்கவும் அதன் முக்கிய சக்தி வளங்களை ஏற்றுமதி செய்யவும் உதவக்கூடியது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

---

# ஐ.நா. அமைதி காக்கும் படை லெபனானில் தொடர்ந்தும் பணி



ஐ.நா. அமைதி காக்கும் படையினர் (யுனிபில்) லெபனானில் தொடர்ந்தும் பணியாற்றுவர் என்று அப்படையின் பேச்சாளர் ஆண்ட்ரியா டெனென்டி தெரிவித்துள்ளார்.

தெற்கு லெபனான் மீது தரைவழி இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துள்ள இஸ்ரேல் ஐ.நா. அமைதி காக்கும் படையினரை அங்கிருந்து வெளியேறுமாறு கூறியிருந்தனர்.

இந்நிலையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அப்படையின் பேச்சாளர், இஸ்ரேலிய இராணுவத்தினர் சமீபத்திய நாட்களில் எங்களது வீரர்கள் மீதும் எங்கள் நிலைகள் மீதும் வேண்டுமென்றே பல நேரடி தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன் விளைவாக சில வீரர்கள் காயமடைந்தும் உள்ளனர். அதேநேரம் அங்கிருந்து எங்களை நகர்ந்து செல்லுமாறும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதற்கு ஐ.நா. உட்பட உலகின் பல நாடுகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆகவே எமது படையினர் லெபனானில் தொடர்ந்தும் பணியாற்றுவர் என்றும் கூறியுள்ளார்.

லெபனான் ஐ.நா. அமைதி காக்கும் படையில் தற்போது 10 ஆயிரம் வீரர்கள் கடமையாற்றிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

# பிரான்ஸில் கடும் மழை, வெள்ளம் ஆறு பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



பிரான்ஸ் நாட்டில் கடும் மழை காரணமாக வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அந்நாட்டின் தெற்கு பகுதியிலுள்ள 6 நகரங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மூன்றாவது பெரிய நகரான லியோன், திரைப்பட விழா நடைபெறும் கான் உள்ளிட்ட நகரங்களும் இந்த சிவப்பு எச்சரிக்கை பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு பிரான்ஸின் 18 பிரதேசங்களுக்கு முன்னெச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பின் நிமித்தம் பல நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

மேலும், நீர் சூழ்ந்துள்ள இடங்களில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுப்பதன் மூலம் மக்கள் தங்களை ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ள வேண்டாம் என்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். இவ் வெள்ளத்தினால் உயிரிழப்பு மற்றும் காயம் போன்ற சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.

தெற்கு ஐரோப்பாவில் ஒரு வாரத்திற்கு முன்னர் ஏற்பட்ட கிர்க் சூறாவளியே பிரான்ஸில் வெள்ளம் ஏற்பட காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே இடத்தில் சுமார் 630 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி 48 மணித்தியாலயங்களில் பதிவானதாக பிரான்ஸ் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# சாஃப்: முதல் போட்டியில் இலங்கை மகளிர் வெற்றி



சாஃப் மகளிர் கால்பந்து சம்பியன்சிப் போட்டியில் இலங்கை அணி நேற்று (18) தனது முதல் ஆட்டத்தில் மாலைதீவுக்கு எதிராக 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

நேபாளத்தில் ஆரம்பமாகியுள்ள இந்தத் தொடரில் இலங்கை மகளிர் நேற்று பி குழுவுக்காக தனது முதல் போட்டியில் களமிறங்கியது. பரபரப்பாக நடந்த இந்தப் போட்டியில் 18 ஆவது நிமிடத்தில் வைத்து எமிஷா அநுராதினி இலங்கை சார்பில் கோல் ஒன்றை பெற்றார். தொடர்ந்து இரு அணிகளும் கோல் பெற முடியாத நிலையில் இந்த கோல் வெற்றி கோலாக மாறியது.

இலங்கை அணி அடுத்து எதிர்வரும் ஒக்டோபர் 21 ஆம் திகதி பலம்மிக்க நேபாள அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# இலங்கை ஒருநாள் குழாத்தில் இடத்தை தக்கவைத்தார் ஷிராஸ்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வேகப்பந்து விச்சாளர் மொஹமட் ஷிராஸ் தனது இடத்தை தக்கவைத்திருப்பதோடு கடைசியாக இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம்பெற்ற பெரும்பாலான வீரர்கள் தமது இடத்தை தக்கவைத்துள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20 தொடரை வென்ற நிலையில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடர் நாளை பல்லேகலவில் ஆரம்பமாகவுள்ளது. இதில் சாமிக்க கருணாரத்னவுக்கு பதில் இளம் சகலதுறை வேகப்பந்து வீச்சாளர் சமிந்து விக்ரமசிங்க அணியில் இடம்பெற்றுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சயவுக்கு பதில் ஜெப்ரி வன்டர்சே 16 பேரில் இடம்பெற்றுள்ளார்.

கடந்த ஒகஸ்டில் இந்தியாவுக்கு எதிராக 27 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருநாள் தொடர் வெற்றியைப் பெற்ற இலங்கை அணியில் கடைசி நேரத்தில் சேர்க்கப்பட்ட ஷிராஸ் ஒரே ஒரு போட்டியில் ஆடி இருந்தார். இதில் காயத்திற்கு உள்ளான மதீஷ பதிரண மற்றும் டில்ஷான் மதுஷங்கவுக்கு பதிலே அப்போது ஷிராஸ் அணியில் இடம்பிடித்தார். இந்நிலையில் பத்திரண மற்றும் மதுஷ்க அணியில் இடம்பெற்றுள்ளனர்.

**இலங்கை அணி ஒருநாள் குழாம்:** சரித் அசலங்க (தலைவர்), அவிஷ்க பெர்னாண்டோ, பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, சதீர சமரவிக்ரம, நிஷான் மதுஷ்க, துனித் வெள்ளாலகே, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, ஜெப்ரி வென்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, அசித்த பெர்னாண்டோ, டில்ஷான் மதுஷங்க, மொஹமட் சிராஜ்.

## மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி அளித்து இறுதிக்கு தென்னாபிரிக்கா முன்னேற்றம்



மகளிர் டி20 உலகக் கிண்ண அரையிறுதியில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி கொடுத்த தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

டுபாயில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற முதல் அரையிறுதியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அவுஸ்திரேலிய மகளிர் அணியை 20 ஓவர்களுக்கு 5 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த தென்னாபிரிக்காவால் முடிந்தது.

ஆரம்ப வீராங்கனையான பெத் மூனி 42 பந்துகளில் 2 பௌண்டரிகளுடன் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த தென்னாபிரிக்க அணிக்கு இரண்டாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த லோரா வெல்வார்ட் (42) மற்றும் அனெக்கா பொஸ்ச் (ஆட்டமிழக்காது 74) 96 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 17.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 135 ஓட்டங்களை எட்டியது. குறிப்பாக அவுஸ்திரேலிய அணி ஏழு பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியபோதும் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்க முடியாமல்போனது.

இதன்படி நாளை (20) டுபாயில் நடைபெறும் மகளிர் டி20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் முதல் அணியாக தென்னாபிக்கா முன்னேற்றம் கண்டுள்ளது. ஏற்கனவே இங்கிலாந்து அணி ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறிய நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டி ஒன்று இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியா இன்றி நடைபெறுவது இது முதல் முறையாக அமையவுள்ளது.

# நீக்கப்பட்டார் ஹத்துருசிங்க



தவறான நடத்தை மற்றும் ஒப்பந்த விதிகளை மீறியதற்காக இடை நிறுத்தப்பட்ட பங்களாதேஷ் தலைமைப் பயிற்சியாளர் சந்திக்க ஹத்துருசிங்க பதவி நீக்கப்பட்டுள்ளார்.

ஹத்துருசிங்கவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தல் வழங்கப்பட்டதோடு அதற்கு அவர் புதனன்று பதில் அளித்ததாகவும், இதனையடுத்து நடத்தப்பட்ட அவசரக் குழுக் கூட்டத்தில் அவரின் ஒப்பந்தத்தை நீக்க தீர்மானிக்கப்பட்டது என்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தின் போது முன்னாள் இலங்கை வீரரான ஹத்துருசிங்க, வீரர் ஒருவரின் கன்னத்தில் அறைந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் ஊடக சந்திப்பில் பேசிய பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தலைவர் பரூக் அஹமது, 'பத்திரிகையில் இந்த சம்பவம் தொடர்பில் தெரிந்தபோது நான் கவலை அடைந்தேன். யாரையும் நான் பாதுகாக்கவில்லை, ஆனால் பதற்றத்தில் எதுவும் நடக்கலாம். என்றாலும் தேசிய ஒரு வீரர் ஒருவரை அடிக்க முடியாது. இந்தத் தண்டனை சரியானது. இதற்கு முன்னரே இது நடந்திருக்க வேண்டும்' என்றார்.

# அபூதாபி டி10 லீக்கில் 21 இலங்கை வீரர்கள்



எதிர்வரும் அபூதாபி டி10 லீக் போட்டியில் இலங்கையின் 21 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பத்து அணிகளாக அதிகரிக்கப்பட்டிருக்கும் இம்முறை தொடர் எதிர்வரும் நவம்பர் 21 தொடக்கம் டிசம்பர் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் நடப்புச் சம்பியன் நியூயோர்க் ஸ்ட்ரைக்கர்ஸ் இலங்கையின் மதீஷ பத்திரண, குசல் பெரேரா மற்றும் 19 வயது துமிந்து செவ்மின ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை பிரேவ் ஜகுவார்ஸ் அணி இலங்கையின் அதிக வீரர்களை ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த அணியில் இலங்கையின் ஆறு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். திசர பெரேரா, நுவன் துஷார, பானுக்க ராஜபக்ஷ, அக்கில தனஞ்சய, கருக்க செங்கத் மற்றும் கவிந்து நதீஷன் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் (டீம் அபுதாபி), இலங்கை அணியின் முன்னாள் தலைவர் தசுன் ஷானக்க (பங்களா டைகர்ஸ்), வனிந்து ஹசரங்க (டெல்லி புல்ஸ்), மஹீஷ் தீக்ஷன (டெக்கான் கிளேடியேட்டர்ஸ்) மற்றும் துனித் வெள்ளாலகே (அஜ்மான் போல்ட்ஸ்) ஆகியோரும் அபூதாபி டி10 லீக்கில் இடம்பெற்றுள்ளனர்.

## இரு குசல்களின் அதிரடியால்:

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இலங்கை முதல் தொடர் வெற்றி



குசல் மெண்டிஸ், குசல் பெரேராவின் அபார ஆட்டத்தின் மூலம் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியில் 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி, முதல் முறை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக டி20 தொடர் ஒன்றை 2–1 என கைப்பற்றியது.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணிக்கு 163 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் ஆரம்ப வீரர்களான பத்தும் நிசங்க மற்றும் குசல் மெண்டிஸ் 32 பந்துகளில் 60 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

பத்தும் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் குசல் ஜனித் பெரேராவுடன் இணைந்த குசல் மெண்டிஸ் அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார். இதன்போது அதிரடி ஆட்டத்தைக் காட்டிய குசல் மெண்டிஸ் 50 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களைப் பெற்றதோடு மறுபுறம் குசல் பெரேரா 36 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றார்.

'அணி இந்த இலக்கை எட்டியது மகிழ்ச்சியானது. இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது இலகுவானதல்ல, என்றாலும் இந்தச் சூழல் எமக்கு பழக்கப்பட்டது' என்று ஆட்ட நாயகன் விருதை வென்ற குசல் மெண்டிஸ் போட்டியின் பின்னர் தெரிவித்தார்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, மத்திய வரிசையில் அணித் தலைவர் ரோவ்மன் பவல் பெற்ற 27 பந்துகளில் 37 ஓட்டங்கள் மற்றும் குடகேஷ் மோட்டி பெற்ற 15 பந்துகளில் 32 ஓட்டங்களின் மூலம் 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற முடிந்தது.

அடுத்து இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் மோதும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளை (20) பல்லேகலவில் ஆரம்பமாகவுள்ளது.

# இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இந்திய அணி நிதான ஆட்டம்



நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு இரண்டாவது இன்னிஸை ஆடிவரும் இந்திய அணி ஸ்திரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

பெங்களூரில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 46 ஓட்டங்களுக்கே சுருண்ட நிலையில் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னங்ஸுக்காக 91.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றது. ரச்சின் ரவிந்திரா 134 ஓட்டங்களைப் பெற்றதோடு ஆரம்ப வீரர் டெவோன் கொன்வோய் 91 ஓட்டங்களைப் பெற்று சதத்தைத் தவறவிட்டார்.

பந்துவீச்சில் குல்திவ் யாதவ் மற்றும் ரவிந்திர ஜடேஜா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் 356 ஓட்டங்களால் முதல் இன்னிங்ஸில் பின்தங்கி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க வேண்டிய நெருக்கடியுடன் நேற்று மூன்றாம் நாளில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஆட்டநேர முடிவின்போது 49 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது.

சப்ராஸ் கான் 78 பந்துகளில் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். விராட் கொஹ்லி 70 ஓட்டங்களைப் பெற்றதோடு அணித் தலைவர் ரோஹித் ஷர்மா 52 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 7 விக்கெட்டுகள் கைவசம் இருக்க இன்னும் 125 ஓட்டங்களைப் பெற வேண்டும்.

# இங்கிலாந்தை வீழ்த்தி தொடருக்கு உயிரூட்டியது பாகிஸ்தான் அணி



நோர்மன் அலி எட்டு விக்கெட்டுகளை வீழ்த்த இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 152 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரை 1–1 என சமப்படுத்தியது.

முல்தானின் நேற்று (18) முடிவுற்ற இந்த டெஸ்ட் போட்டியில் 297 ஓட்ட வெற்றி இலக்குடன் நான்காவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி 33.3 ஓவர்களில் 144 ஓட்டங்களுக்கே சுருண்டது. அபாரமாக பந்து வீசிய அலி 16.3 ஓவர்களில் 46 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 366 ஓட்டங்களைப் பெற்றதோடு இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸுக்காக 291 ஓட்டங்களைக் குவித்தது. இந்நிலையில் பாக். அணி இரண்டாவது இன்னிங்ஸில் 221 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்துக்கு சவாலான வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

பாகிஸ்தான் அணி 2021 பெப்ரவரிக்குப் பின்னர் தனது சொந்த மண்ணில் பெற்ற முதல் வெற்றியாக இது உள்ளது. குறிப்பாக இங்கிலாந்துக்கு எதிராக முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி 500க்கும் மேல் ஓட்டங்களைப் பெற்றபோதும் அந்தப் போட்டியில் இன்னிங்ஸால் தோற்றிருந்தது. இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர்24 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளது.